திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 11 நவம்பர்–06

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. இரா குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி. வீரணன் | உறுப்பினர் |
| திரு. மா. ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | தலைவர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர். திரு. க. சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |
| டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பி.எச்.டி., | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 100
பகுதி : 11
**நவம்பர் 2006**

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | ரூ. |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

## பொருளடக்கம்


**இதழ்மணம்** **792**

**செந்தமிழ்க்கல்லூரி பட்டமளிப்பு விழா** **793**

**நூல் மதிப்புரை** **794**

*தமிழ் தமிழ் வளர்ச்சி (மேம்பாடு, பயன்பாடு, வளர்ச்சி)*

*-அறிஞர் V.I.சுப்பிரமணியம்*

**சிலம்பு காட்டும் நீதிநெறி** **798**

- கழுகுமலை *வை.பூ. சோமசுந்தரம்*

**கம்பனும் மில்டனும்** - *சு. தேவி* **805**

**ஒலியும் மொழியும்** **812**

- பேராசிரியை *வீ. ரேணுகாதேவி*

**ஐங்குறுநூற்றில் சொற்றொடர் அமைப்பு** **820**

- முனைவர் *இரா. சுதமதி*

**சான்றோர் சிந்தனை** **829**

- முனைவர் *க. சின்னப்பா*

# இதழ்மணம்

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்டுச் செயல்படும் நம் செந்தமிழ்க் கல்லூரியில் இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் பட்டமளிப்பு விழா புகைப்படம் முதல் செய்தியாக அமைத்து, இந்த இதழின் புதுமையைப் படம் பிடித்து காட்டியுள்ளது.

தமிழ்மீது கொண்ட தனியாத காதலினால் எழுந்த தமிழ்வளர்ச்சி - மேம்பாடு, பயன்பாடு, வளர்ச்சி என்ற நிலை அதேபோன்று தமிழ்மீது தணியாத காதல் கொண்ட அறிஞர் சுப்பிரமணியம் திறனாய்வு செய்துள்ளார்.

அரசன் அன்று கொள்வான் என்ற முதுமொழியே சிலம்பு காட்டும் நீதிநெறி என்பதைக் கழுகுமலை வை.பூ. சோமசுந்தரத்தின் ஆய்வுக் கட்டுரை தெளிவுறுத்துகிறது.

கம்பரின் கம்பராமாயணமும், மில்டனின் சொர்க்க நீக்கமும் காவிய அமைப்பிலும் கதைக் கூறுகளிலும் ஒன்றுபட்டு விளங்குவதை கம்பனும் மில்டனும் என்ற கட்டுரை வெளிப்படுத்துகிறது.

மனித வாழ்க்கைக்கும் பண்பாட்டுச் சிறப்பிற்கும் காரணமாகத் திகழும் மொழியும் அதற்கு அடிப்படையாக அமையும் ஒலியும் பற்றிய சிந்தனையைத் தம் கட்டுரையில் இணைப்பேராசிரியை முனைவர் வீ. ரேணுகாதேவி புலப்படுத்தியுள்ளார்.

இலக்கண அமைப்பில் இலக்கியத்தை ஆராயும் பேச்சில் ஐங்குறுநூற்றில் சொற்றொடர் அமைப்பு என்னும் கட்டுரை அமைந்து நம் இதழுக்கு சிறப்புச் செய்துள்ளது.

மனிதனைப் பண்படுத்தும் பண்பாகிய பொறாமையை நீக்கவேண்டும் என்பதை முனைவர். க. சின்னப்பா சான்றோர் சிந்தனையை வானொலி வாயிலாக வெளியிட்டு நம் சிந்தனையைத் தூண்டுகிறது.

பலவண்ண மாலையைப் போல் நம் கண்ணையும் கருத்தையும் கவர்வதாக இந்த இதழ் அமைந்துள்ளது.

பதிப்பாசிரியர்.

# 2005 - 2006 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா



செல்வி நிர்மலாதேவி முதுகலைப்படிப்பில் பல்கலைக்கழக அளவில் முதன்மை பெற்றார். உடன் துணைவேந்தர் பி. மருதமுத்து, முன்னாள் செயலாளர் தெய்வத்திரு. மா. சங்கரபாண்டியன், இந்நாள் செயலாளர் இரா. குருசாமி, தமிழ்ச்சங்கச் செயலாளர் இரா. அழகுமலை மற்றும் கல்லூரி முதல்வர்.

# 2006-2007 ஆம் ஆண்டுப் பட்டமளிப்பு விழா



அழகப்பா பல்கலைக்கழக முதன்மையர். திருமதி. கோகிலாவாணி அவர்கள் செல்வி. சந்திராவுக்கு பட்டம் வழங்குகிறார். உடன் முதல்வர், செயலர்கள் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர் இரா. கண்ணன்.

# நூல் மதிப்புரை

அறிஞர் V.I.சுப்பிரமணியம்

நூல் : **தமிழ் வளர்ச்சி**
(மேம்பாடு, பயன்பாடு, வளர்ச்சி)

ஆசிரியர் : டாக்டர். வி.சி. குழந்தைசாமி
பாரதி பதிப்பகம், சென்னை, 2005. விலை : ரூ.100/-

அழகாக அச்சிடப்பட்ட விரிவான இந்த நூல் 452 பக்கங்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் மொழி மேம்படுதற்குரிய வழிவகைகளைப் பாராட்டும் வண்ணம் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

தமிழ்மொழி வளம்பெற எழுத்துச் சீர்திருத்தம், அறிவியல் நூல்கள் ஆக்குதல், தமிழைச் சீராக்கும் நிறுவனங்களை உருவாக்குதல் முதலிய கருத்துக்களைத் தக்க விளக்கங்களுடன் ஆசிரியர் விளக்கியிருக்கிறார்.

ஒவ்வொரு கட்டுரையும் படிப்போர் மனதில் பதியும் வண்ணம் கோர்வையாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு கட்டுரையிலும் கூறிய சில கருத்துக்கள் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன. இதை ஆசிரியரே அடிக்குறிப்பில் விளக்கியுள்ளார். முன்னே எழுதிய நூல்களின் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளதும் ஆசிரியர் அடிக்குறிப்பில் கூற மறந்திடவில்லை.

தூய தமிழ், வட எழுத்து நீக்கம் முதலிய விவாதத் தலைப்புகளை வாதப் பிரதிவாதம் இன்றி ஆசிரியர் விளக்கியுள்ளார்.

தாம் தலைமையேற்றுள்ள அரசு உருவாக்கிய 'தமிழ் வெர்ச்சுவல்' பல்கலைக்கழகம், பன்னாட்டுத் தமிழ் ஆய்வு நிறுவனம் முதலியவற்றின் செயல் திட்டங்களை விரிவாகக் கூறும் ஆசிரியர் ஏனைய நிறுவனங்களைக் குறிப்பாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம், தனியார் சிலரின் செயல்பாடுகள் முதலியவற்றைக் கூறாமல் விட்டுவிட்டார். தமிழ்ப் பல்கலைக் கழக 'சிண்டிகேட்' முதலிய அவைகளின் உறுப்பினராக இருந்ததாக நினைவு. எனவே, அதன் செயல்பாடுகளை அறிந்திட வாய்ப்பு இருந்திருக்கும்.

'ரோமன்' எழுத்தைக் கையாளுமாறு முன்னே ஆளுநராகவும் பாரத நாட்டின் தலைவராகவும் இருந்த வி.வி. கிரி கூறியிருந்தார். ஆங்கிலத்தில் வெளியான 'தமிழ்க் கல்ச்சர்' என்ற காலாண்டு இதழ் இந்திய நாட்டு மொழிப் பிரச்சனை தீர, எந்த எழுத்து முறையைப் பயன்படுத்த வேண்டும் என்ற கேள்விக்கு விரிவாகப் பலருடைய

கருத்துக்களை வெளியிட்டது. இந்தச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவராதது வருந்தத்தக்கது. அதன் ஆசிரியரான தனிநாயகம் பாதிரியார் செய்த தொண்டும் இந்த நூலில், வி.சி.கே குறிக்கவில்லை.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அறிஞர்களும் அரசியல்வாதிகளும் ஆங்கிலமா? இந்தியா? எது பொது மொழியாக வேண்டும்! என்று ஈடுபாட்டுடன் வாதித்தனர். தென்னாட்டு அரசியல் கட்சிகளில் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்ற கழகம் முதலியவை இந்தியை எதிர்த்தன. திராவிட முன்னேற்ற கழகம் தேர்தலில் மொழிப்பிரச்சனையால் வெற்றி கண்டு அரசாங்கம் அமைத்தது. ஆனால், இன்று அந்தப் பிரச்சனையை மறந்துவிட்டது.

சென்ற இருபது ஆண்டுகளில் பல அறிவியல் நூல்கள் தமிழில் வெளியாயின. 'கலைக்கதிர்' முதலிய தரமான மாத இதழ்கள் இதற்குத் துணை நின்றன. பல்கலைக்கழகங்களிலும் தமிழில் சில அறிவியல் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கலைச் சொற்கள் பலவற்றை உருவாக்க முயன்று ஓரளவு அவை வெற்றி பெற்றன. இன்று; தென்னாட்டில் இந்த முயற்சி தொடர்ந்து நடைபெறவில்லை.

'உலகமயமாக்கல்' இந்திய நாட்டில் மேலோங்கியதால் ஆங்கிலத்தின் செல்வாக்கு அதிகரித்தது. தென்னகம் குறிப்பாகத் தமிழகம் ஆங்கிலப் படிப்பை ஊக்குவித்தது. வடநாடு இந்திப் படிப்பை மேற்கொண்டது. பஞ்சாப், வங்காளம் முதலிய மாநிலங்கள் இந்தியைப் பாடமொழியாக வற்புறுத்தாவிட்டாலும் மாணவர்கள் படிக்கத் தொடங்கிவிட்டனர். எனவே, மொழிப் பிரச்சனை இன்று அணைந்த நெருப்பாக மாறிவிட்டது. தமிழ் நாட்டில் பதவியிலிருக்கும் தி.மு.க. அரசுகூட அறிவியல் நூல்களை வெளிக்கொணர அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

படித்த இளைஞர்கள் எந்தப்பாடம் அல்லது எந்த மொழியில் படித்தால் எளிதில் வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்து அந்த மொழியில் பாடத்தைப் படிக்கின்றனர். சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளில் குடியேறிய தமிழர் அந்நாட்டு மொழிகளில் படிப்பது வேலை தேடும் நோக்கத்தால்தான்.

மிகச்சிலரே அதிலும் செல்வச் செழிப்பு உள்ள சிலரே தாய்மொழியாகிய தமிழ் மீது பற்றுதல் உள்ளவர்களாக இருக்கின்றனர். நாளாவட்டத்தில் தமிழ்மொழியும் சமஸ்கிருதம் போன்று வழக்கிழந்த மொழியாக, பண்பாட்டை விளக்கும் மொழியாக மாறிவிடும். இந்த நிலையைத் தவிர்க்க இயலுமா? என்று சிந்தித்த வி.சி. குழந்தைசாமி, தமிழுக்கு என ஒரு நாடு இல்லை என்ற குறையைச் சுட்டிக்காட்டுகிறார். ஈழத் தமிழரின் போராட்டங்களைக் குறிப்பிடுகிறார். அவர் கருத்து சிந்திக்கத் தக்க ஒன்று.

மற்றொன்றையும் நாம் நினைவிற்கொள்வது நன்று. சமஸ்கிருதத்தின் உலகளாவிய படிப்பிற்கு ஒரு காரணம் அது இந்தோ ஐரோப்பிய மொழிகளின் முன்னுருவம் கொண்ட மொழி. இந்தோ ஐரோப்பிய சொற்பிறப்பை அறிய சமஸ்கிருத அறிவு மிகவும் தேவை. எனவே, அதனை ஜெர்மனி, பிரஞ்சு, இங்கிலாந்து முதலிய நாட்டவர்கள் பயில்கின்றனர்.

தமிழ், தெலுங்கு முதலிய திராவிட மொழிகள் 'பின்னோ உக்ரிக்' (Finnougrie) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. பின்லன்று, உக்ரைன் முதலிய நாடுகள் வல்லரசு நாடுகளல்ல பரப்புடைய நாடுகளும் அல்ல. பத்து ஆண்டுகளுக்கு முன்னர், திராவிட மொழியியல் கழகம் ஆய்வாளர் ஒருவரை அங்கு அனுப்பியது. அந்நாட்டு **அஸ்கோ பற்போலோ** என்ற அறிஞர் மொகஞ்சதாரோ எழுத்துக்களைப் படித்தறிய தமிழகம் வந்திருந்தார். அதன்பின் எந்தத் தொடர்பும் இல்லாது போய்விட்டது. அதனை உயிர்ப்பித்தால் திராவிட மொழிப் படிப்பை விரிவாக்க மிக உதவியாக இருக்கும்.

சமஸ்கிருதத்தை அடுத்து மிகப் பழமையான இலக்கியச் செல்வத்தைத் தமிழ்மொழி கொண்டுள்ளது. அகம், புறம் எனப் பகுத்து ஒன்பது பெரிய நூல்களைத் தன் முதல் இலக்கியமாகத் தமிழ் கொண்டுள்ளது. அதன் இலக்கியச் செல்வம் ஆங்கிலம் முதலிய உலகறி மொழிகளில் பெயர்க்கப்பட்டால் தான், பிற உலக அறிஞர்களும் தமிழின் இலக்கியச் சிறப்பையும் அதன் தொன்மையையும் அறிந்திட முடியும். இந்த மாற்றத்திற்குத் தமிழர்கள் முயலவேண்டும். வி.சி. குழந்தைசாமி மேல்வாரியாக இந்தக் கருத்துக்களை வற்புறுத்தியிருக்கிறார்.

மற்றொன்று, கணிப்பொறி. இப்போது மொழிப் படிப்பிற்கும் மொழி ஆக்கத்திற்கும் பயனாகின்றது. மொழி மாற்றத்திற்கும் எழுத்து மாற்றத்திற்கும் கணிப் பொறியின் பங்கு கணிசமானது. எனவே, தமிழ் மொழியும் ஏனைய மொழிகளும் வழக்கு வீழாது மக்களிடையே பரவ கணிப்பொறி மிகவும் உதவும். கணிப்பொறியில் மிகவும் அக்கறை உடைய ஆசிரியர் அதன் பயன்பாட்டைக் கூறாமல் விட்டுவிட்டார்.

தமிழ் ஆர்வலர்களும் மொழி வளர்ச்சிக்குப் பாடுபடும் அறிஞர்களும் வி.சி. குழந்தைசாமியின் கருத்துக்களைச் சீர்தூக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். ஆக்கப் பூர்வமான ஒரு நல்ல நூல். அச்சுப்பிழை மிகக் குறைவான பெரிய நூல். இதைத் தமிழகம் வரவேற்கும் என்பது உறுதி.

# சிலம்பு காட்டும் நீதிநெறி

-கழுகுமலை வை.பூ. சோமசுந்தரம்.

## முன்னுரை

13.08.2004 தினமணி நாளிதழில் ஒரு செய்தி! "குடியரசுத் தலைவரின் முடிவை எதிர்க்கும் மனு உச்சநீதிமன்றத்தில் தள்ளுபடி. பள்ளி மாணவியைக் கற்பழித்துக் கொன்ற தனஞ்சய்க்கு, தூக்குத் தண்டனை உறுதி" 1990 மார்ச் 5இல் நடந்த கொடுமை இது. அலிப்பூர், நீதிமன்றம் 12.08.91 இல் தூக்குத்தண்டனை விதித்தது. கோல்கத்தா உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் ஏற்றன. கருணை மனு குடியரசுத்தலைவரால் ஏற்கப்படவில்லை. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்து 12.08.04 இல் தீர்ப்பு உறுதியாயிற்று. 14.08.2004 இல் தூக்கில் இடப்படும் நிலை! 13 ஆண்டுகள் வழக்கு நடந்துள்ளது. கோவலன் கொலையுண்டான் ஒருநாள். மறுநாள் கண்ணகி வழக்குரைத்து, தீர்ப்பு பெற்றாள். சிலம்பு உணர்த்தும் நீதிநெறி இதுதான். "தாமதமான நீதியும் அநீதிதான்". இந்த நீதிநெறிப் பாடத்தை விளக்கமாகக் காண்போம்.

## தமிழ் இலக்கியங்களில் நீதிநெறி

வழக்கினை ஆராய்ந்து எவரிடமும் கண்ணோட்டம் காட்டாமல் நடுவுநிலை தவறாமல் தேர்ந்து முடிவு செய்வதே "முறைசெய்தல்" ஆகும் என்பது குறள்நெறி. குறள் வருமாறு.

"ஓர்ந்து கண்டோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை" – குறள் 541

அறத்தின் அடிப்படையில் அறங்கூறு அவையம் இயங்கியது. சான்றோர் உள்ளத்தில் நினைந்து அறத்தைப் போற்றினர். மதுரைக்காஞ்சியில்,

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத்தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூ றவையமும்"
– ம.கா. 489 – 492

என்ற வரிகள் இதனைப் புலப்படுத்தும்.

மனுவேந்தன் தன்மைந்தனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றதைப் பெரிய புராணம் பாடும் – புகழும்.

"அருமந்த அரசாட்சி அரிதோ மற் றெளிதோதான்"

–பெரியபுராணம் – திருநகரச் சிறப்பு 44.

மணிமேகலை மற்றும் பிற இலக்கியங்களிலும் நீதிநெறி மிளிரக் காணலாம்.

**சிலம்பில் நீதி**

சிலம்பில் பாயிரத்தில், காவிய நோக்கங்கள் மூன்றில், முதன்மையாகப் போற்றப்படுவது, "அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று" என்பது. நீதிநெறி பிறழ்ந்தோர் வீழ்வர் என்பது சிலம்பின் மையக்கருத்து. சிலம்பில் நீதிநெறி பற்றிய பல குறிப்புகள் உள்ளன. அரங்கேற்றுக் காதையில் மாதவியின் நாட்டிய அரங்கேற்றத்தைக் கண்ணுற்ற சோழ மன்னனை, இளங்கோ அடிகள் "காவல் வேந்தன்" பரிசில் தந்து பாராட்டுவதாகக் கூறுகிறார். அமைதியான வளமார் நாட்டில் கலைகள் செழிக்கும் அல்லவா?

**புகார்**

புகார் நகரில் வெள்ளிடைமன்றம் பூதசதுக்கம், பாவைமன்றம் ஆகியன இருந்தன. இவை நீதிகாத்திட, நீதி உணர்ந்திட இருந்த அமைப்புகளாக இளங்கோ போற்றுகிறார். பிறர்பொருளைத் திருடியோரைத் தண்டித்துத் திருத்தும் வெள்ளிடைமன்றம், நீதி தவறி நடக்கும் அமைச்சர் போன்றோரைப் பாசக் கயிற்றால் பிடித்துப் புடைத்து உண்ணுவது சதுக்கப்பூதம். அரசன், அறங்கூறு அவையத்தார், நடுநிலை பிறழ்ந்து செயல்பட்டால் கண்ணீர்விட்டு அழும் பாவை உள்ள மன்றம் ஆகியவை சொல்லப்பட்ட நோக்கம் நீதிகாக்கப்பட வேண்டுமென்பதே இவை இளங்கோவின் கனவுகள் எனலாம்.

**கண்ணகி போற்றும் புகார்**

பாண்டிய மன்னன் அவைக்களத்தில், நீதி கேட்டு வந்த கண்ணகி, தன்னை அறிமுகப்படுத்தும்போது,

"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்உறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்

வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப்புகார்என் பதியே – வழக்குரை காதை 51 – 56

என்று கூறுகிறாள். இதில் புகார் நகரின் சிபி மாமன்னன், மனுநீதிச் சோழன் ஆகியோரின் நீதிகாத்த நேர்மையைச் சுட்டிக் காட்டுகிறாள். இதுபோன்ற காரணங்களால் நீதி நிலைத்த புகார் நகரை – "பெரும்பெயர்ப் புகார்" என்று குறிப்பிடுகிறாள்.

**வழக்குரை காதை**

சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதை ஒரு நாடகக் காட்சியாக அமைந்து, சிலப்பதிகாரத்தை "முத்தமிழ்க்காப்பியம்" என்று போற்றிடவும், "நாடகக் காப்பியம்" என்று நவிலவும் வழி செய்துள்ளது. திரைப்படங்கில் நீதிமன்றக் காட்சிகள் வருவதும், அதில் வழக்கறிஞர்களின் வாதம் படம் பார்ப்போர்க்கு மிகுந்த ஈர்ப்பை உண்டுபண்ணுவதும் உண்டு. சிலம்பில் வழக்கறிஞர் இல்லை. வழக்காடியும், எதிர் வழக்காடியும் உள்ளனர். எதிர்வழக்காடியே நீதிபதியாக நடுவராக அமர்ந்திருக்கும் ஒரு வியப்பான நிலை. இன்றுபோல் வேற்றுமொழியில் வழக்கு நடைபெறவில்லை. புரிந்த மொழியில், நேரடி உரை, எதிர் உரை நடைபெறுகிறது.

**கண்ணகி வழக்கு**

கண்ணகி வாயில் காப்போனிடம் தன்னை அறிமுகம் செய்யும்போது, மன்னனின் நீதிபிறழ்ந்த செயலை உறுதியாக உரைக்கிறாள், வெகுண்டு பேசுகிறாள்.

"அறிவு அறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே'
– வழக்குரைகாதை 25–26.

*என்று கூறும்போது,*

"இணை அரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள்" – (27–28)

என்று தெளிவாக உணர்த்திடும் பாங்கில் பேசுகிறாள். பாண்டிய மன்னன், கண்ணீரோடு நிற்கும் கண்ணகியை, மிகுந்த

இரக்கத்தோடு "நீ யார்? கண்ணீரோடு நிற்கிறாயே' என்று கேட்கிறான். கண்ணகி தன் நகரப் பெருமையைக் கூறி, வாழ வேண்டி வந்து – "உன்னால் கொலையுண்ட கோவலன் மனைவி, கண்ணகி நான்" என்கிறாள்.

### வழக்கு மேல் முறையீடு

பாண்டிமாதேவியின் சிலம்பு காணாமல் போயிற்று. எவ்வளவு பெரிய கொடுமை! காவல்மிகுந்த அரண்மனையில் அரசியின் சிலம்பு களவாடப்பட்டுள்ளது. அரசிக்கே இந்த நிலை. குடிமக்கள் நிலை என்ன? கோயில் சிலம்பு கொண்ட கள்வன் தன் சிறுகுடிலில் உள்ளான் என்று கூறுகிறான், பொற்கொல்லன்!' "கரந்து அவன் கொண்ட கால் அணி'. அச்செயல் வெளிப்படா முன், தற்போது கோவலனைக் கள்வன் என்று கூறித் தப்பிக்கத் திட்டமிட்டுப் பேசி வெற்றி பெறுகிறான் அப்பொய்யன்! நூறுகொல்லர் சூழ, நடுவண்வரும் பொற்கொல்லன் இவன்! மேலும் கோவலன்,"மந்திரம் மூலம் சிலம்பைக் கொண்டான்" என்று மன்னனிடம் கூறகிறான். இதை அப்படியே நம்பி, மன்னன் தீர்ப்புக் கூறுகிறான். ஊர்க்காப்பாளரை அழைத்து,"தேவியின் சிலம்பு அக்கள்வன் கையில் இருந்தால், அவனைக் கொன்று, சிலம்பைக் கொணர்க' என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இங்கு விசாரணை இல்லை. தலைமைப் பொற்கொல்லன் கூறியதால், கூறிய வார்த்தைகளின் அடிப்படையில் தீர்ப்பு தரப்பட்டது.

"வினை விளை காலம் ஆகலின்"
"சினை அலர் வேம்பன் தேரான் ஆகி'

என்று இளங்கோ கூறி இருப்பினும், தீர்ப்புக் கூறியதற்குச் சில அடிப்படைக் காரணங்கள் இருந்தன. அரசியின் சிலம்பு களவாடப்பட்டுள்ளது. பொற்கொல்லன் சான்று கூறுகிறான். களவாடியவன் தந்திரத்தால் செய்தான் என்ற கருத்து. இந்தச் சூழ்நிலைகள் மன்னனின் தீரப்புக்கு அடித்தளமாய் இருந்தன.

இக்காலத்தில் அரசு அமைப்பின் மூன்று உறுப்புகளாகிய சட்டம் இயற்றுதல் (Legislature), சட்டங்களைச் செயல்படுத்துதல் (Executive), நீதி வழங்குதல் (Judiciary) என்ற சட்டத்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை ஆகியவை தனித்தனியே செயல்படுகின்றன. மன்னராட்சிக் காலத்தில் மன்னரே மூன்றையும்

தலைமையேற்றுச் செயல்படுத்தினார். பாண்டிய மன்னனும் அந்த நிலையில் கோவலனைக் கொன்று, சிலம்பைக் கொணரத் தீர்ப்பு வழங்கினான். கண்ணகி வழக்கு உரைத்திட வந்தாள். இந்த வழக்குரைத்தல், மேல்முறையீடு என்று நாம் தற்போது கூறும் "Appeal" என்பதாகக் கொள்ளலாம்.

### *சிலம்பில் வென்ற சேயிழை?*

தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைக் கண்ணகி நுட்பமாக வாதிட்டு வென்றாள்.

"என் கால் சிலம்பு மணிஉடை அரியே" – வழக்குரை காதை. 69

என்று தெளிவுபடுத்திய கண்ணகி, கோவலனிடம் கைப்பற்றப் பெற்ற சிலம்பை, மன்னன் கொணர்வித்ததும், அதை எடுத்து, உடைக்கிறாள். அவள் வாழ்க்கையே உடைந்த பின்பு, சிலம்பைப் பற்றி என்ன கவலை? சிலம்பை ஓங்கிக் கீழே போட்டதும் உடைந்து விடுமா? அதன் நிலை என்ன? நமக்குத் தெரியாது. கண்ணகி உடைத்ததும் சிலம்பு உடைந்து மாணிக்கப்பரல் மன்னன் வாய்முதல் தெறித்தது. ஒருவேளை கண்ணகி மிகுந்த சீற்றத்தில் சிலம்பை உடைத்தாளோ? மணிகண்டு, தன்குடை தாழ்ந்து, தன் செங்கோல் தளர்ந்தது என உணர்ந்த பாண்டியன்,

"பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்"

என்று தீர்ப்புக் கூறினான். தான் செய்த தவறுக்குத் தண்டனை என்ன? தென்புலம் காவல்,

"என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள் என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே"

தன் தவறுக்குத் தண்டனையாக "என் ஆயுள் முடியட்டும்" என்று சொன்னான் – உயிர் போயிற்று, இது போன்ற ஒரு தீர்ப்பு முடிவு காண்பது மிக்க அரிதல்லவா? தவறு செய்தவர்கள் – குற்றவாளிகள் என்று நீதிமன்றம் தீர்ப்புக்கூறிய நிலையிலும், சட்டத்தை உருவாக்கும் மன்றம் செயல்படுத்தும் மன்றில் நான் இருப்பேன் என்று ஆட்சி கட்டிலில் இருப்போரும் இதை எதிர்ப்போரும், நம்மிடையே இருப்பதை, நாம் இன்று பார்க்கிறோம் அல்லவா? தன் கணவனைக் கள்வன்

என்று கொலை செய்த மன்னனிடம், வீட்டை விட்டு வெளிஉலகம் காணாதிருந்த கண்ணகி, நீதிகேட்டுப் போராடி வென்றாள்."சிலம்பில் வென்ற சேயிழை" ஆனாள். நீதியை நிலை நிறுத்த ஒரு பேதைப் பெண்ணாலும் முடிந்தது. இதுதான் சிலம்பு காட்டும் எளிய நீதிநெறி. முதல்நாள் கணவன் கொல்லப்பட்டான் – மறுநாள் நீதி கிடைத்தது. தற்போது எல்லாத் துறைகளிலும் மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ளோம். நீதிமன்றங்களும், சட்டங்களும், வழக்கறிஞர்களும் பெருகியும், நீதி கிடைப்பதில் மட்டும் மிகுந்த தாமதம் ஆகிறது.

"கண்ணகி கொண்டு வந்த வழக்கு விசாரணை கால் நாழிகைக்குள் முடிந்து அரசன் தண்டனையும் அடைந்து விட்டான். காலம் தாழ்த்திய நீதி, மறுக்கப்பட்ட நீதி ஆகும். நீதி கிடைக்காமல் போனதற்குச் சமம் ஆகும். (Justice Delayed is Justice Denied)" (சிந்தை அள்ளும், சிலம்பு டாக்டர். பூவண்ணன் பக்கம் 191) என்ற கருத்து இன்று ஆராயத்தக்கது. வாய்தா, hearing, ஈரங்கி என்று வழக்கில் காலநீடிப்பும், தீர்ப்பு ஒத்தி வைக்கப்படுகிறது(Adjournment) என்பதும், மிகச் சாதாரணமாயிற்று, இன்று!

சிலம்பு உணர்த்தும் நீதிநெறி வழியில், தீர்ப்புகள் உடன்கிடைக்க வழிசெய்யவேண்டும். மேலும், பாண்டிய மன்னன், பொய்யுரைத்த பொற்கொல்லனுக்கு எத்தண்டனையும் கூறவில்லை. தீர்ப்புத் தந்த "தன் ஆயுள் கெடுக" என்று உயிர்விட்டான். ஆனால் இன்றோ பொறுப்பில் உள்ளவர்கள் யாரையாவது மாட்டிவிட்டுத் தாம் தப்பிக் கொள்கின்றனர்.

### *அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று?*

பாண்டியன் மிக நல்ல வேந்தன். கோவலன் தன்னால் கொலை உண்டமை உணர்ந்து உயிர்விட்டான். பாண்டியர் தம் செங்கோல் ஆட்சியில், தான் பிழை செய்ததாக உணர்ந்து கூறுகிறான்.

"தென்புலம் காவல், என்முதல் பிழைத்தது" என்பது அவன்கூற்று.
– வழக்குரை காதை 76 – 77.

பாண்டியனின் இந்த முடிவு மூலம் "அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும்" என்பதை இளங்கோ விளக்குகிறார். அரசியலில் பிழை செய்தால் நீதிமன்றம் எனப்படும், அறம் – அறம் கூறு அவையம் – கூற்றுவனாகும், கொலைத் தண்டனை தருவர் என்ற நுட்பமான

பொருளை, இதன்மூலம் உணரலாம். ஆனால் இக்காலத்தில் அரசியலில் தவறுசெய்தவர்களுக்கு, இது பொருந்துமா என்று ஆராய வேண்டும். பொற்கைப்பாண்டியன் வாழ்ந்த நாடு இது. கையூட்டுப் பெறுதல் போன்ற தீங்குகள் புரியும் ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், அலுவலர்கள், வாழ்ந்து கொண்டு இருக்கிறார்களே சிலம்பின் நோக்கம் நிறைவேறுகிறதா? ஆராய்ந்திட வேண்டும்.

### *தெய்வக் கண்ணகி கூற்று*

கண்ணகி வழக்குரைத்து, தன் கணவன் கள்வன் அல்லன் என்று மெய்ப்பித்தபின், மதுரைநகரை மும்முறை வலம்வந்து, தீயவர்களை எரிக்க, தீக்கடவுளுக்குக் கூறினாள். மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் ஊழ்வினை மற்றும் பழம்பிறப்பு பற்றி கூறுகிறது. மதுரை எரிந்த பதினான்காம் நாள், கண்ணகி கோவலனுடன் மேலுலகம் செல்கிறாள். ஆடி அமாவாசையில் மதுரை எரிந்தது. ஆடி அமாவாசை கழிந்த பௌர்ணமி நாளில் கண்ணகி மேலுலகம் சென்றாள்.

*தென்னவன் தீதிலன், தேவர்கோன் தன்கோயில்*
*நல்லிருந்து ஆயினான் நானவன் தன்மகள்*

– வழக்குரைக் காதை 10–12

என்ற கண்ணகி கூற்று ஆராயப் பாலது. சிலம்பில் வென்ற சேயிழை. தென்னவன் தீதிலன் என்று கூறுவது ஏன்? வினைப்பயன் என்று மட்டும் சொல்லமுடியாது.

### *முடிவுரை*

சிலம்பு உணர்த்தும் நீதிநெறி உடனடி நீதிவழங்கும் முறையே. ஆண்டுக்கணக்கில் காலம் தாழ்த்தி தற்போது வழங்கும் நீதி, அநீதிதான் என்பதை உணரவேண்டும். மேலும், பாண்டியன் தீதிலன் என்று சிலம்பில் வென்ற சேயிழை கூறுவது எப்படிப் பொருந்தும் எனின் பாண்டியன் தான் செய்த தவறை உணர்ந்து ஏற்றுக்கொண்டு உயிர்விட்டதால், அத்தீங்கும் மறைந்து விடுகிறது. செய்த தவறை உணர்த்தலும், தண்டனையை மனமார ஏற்றுக் கொள்ளுதலும் ஒரு நல்ல மானுடனுக்கு ஏற்றதல்லவா? அவன் தீயவன் எனினும் நல்லவன் தானே?

# கம்பனும் மில்டனும்

சு. தேவி
முனைவர் பட்ட ஆய்வாளர்
அறிவியல் தமிழ்த்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இலக்கியப் படைப்புகள் காலம், இடம், மொழி, பண்பாட்டுச் சூழல்களுக்கேற்ப அமையும். மனிதனை மேம்படுத்தத் துணைபுரியும் . சமுதாய வளர்ச்சிக்கு உறுதுணை புரியும். நாகரிகத்தை மேம்படுத்தப் பண்பாட்டை உறுதிசெய்யும் வகையில் உலகின் தலைசிறந்த காவியப் பாவலர்களான கம்பனும், வால்மீகியும் மனித மேம்பாட்டிற்கும், காவியப் பாவிகத்திற்கும் ஆற்றிய தொண்டுகள் போற்றுதற்குரியன. கம்பராமாயணமும், சொர்க்க நீக்கமும் உலகின் தலைசிறந்த காப்பியங்களாகத் திகழ்கின்றன.

**கம்பர்**

கம்பர் சோழ வளநாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தன் மகனாகப் பிறந்து சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டார். வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவித் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்பக் கம்பராமாயணத்தைத் தந்துள்ளார். தனது இராமாயணத்தைச் சிதம்பரத்தில் அரங்கேற்ற நினைத்து இயலாதபோது திருவரங்கத்தில் அரங்கேற்றினார். திருவரங்கத்தில் அரங்கேற்றும்பொழுது சடகோபர் அந்தாதி பாடினார். மேலும் சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம், ஏர் எழுபது, சிலை எழுபது என்ற நூல்களையும் பாடியுள்ளார். தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலைப் பத்து இடங்களில் போற்றிப் பாடியுள்ளார்.

***மில்டன் 1608-74***

ஆங்கில மொழிக்கு உரமூட்டியவர்கள் இருவர். ஒருவர் மில்டன், மற்றொருவர் ஷேக்ஸ்பியர். மில்டன் தலைசிறந்த காப்பியப் பாவலர். கிரேக்க மொழியில் உள்ள காப்பியங்களை ஆங்கிலத்திலும் படைக்க வேண்டுமென விரும்பினார். இவர் 9.12.1608இல் இலண்டன் மாநகரில் பிறந்தார். செயின்ட் பால் பள்ளியில் பயின்றார். பதினாறாவது வயதில் கேம்பிரிட்ஜ் கிறித்துவக் கல்லூரியில் பயின்று 1625இல் பி.ஏ. பட்டமும், 1632இல் எம்.ஏ., பட்டமும் பெற்றார். பள்ளிப் பருவத்திலேயே சிறந்த கவிதைகளை எழுதியுள்ளார். 1641இல் சீர்திருத்தக் கவிதைகளை எழுதினார். சொர்க்க நீக்கம் என்ற நூலை 1655இல் எழுத ஆரம்பித்து 1663இல் முடித்தார். 1674இல் மறைந்தார்.

## இராமகாதையும் சொர்க்க நீக்கமும்

கம்பர் சோழர் ஆட்சியின் கொடுமுடியான காலகட்டத்தில் அதிக இன்பத்தில் திளைத்திருந்த மக்களுக்குச் சில எச்சரிக்கைகளைத் தர இராமாயணத்தைப் படைக்கிறார். இராமகாதையின் மீது கொண்ட ஈடுபாடும், தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றும், காரணமாகக் கவித்துவ உந்துதலாலும், சமுதாயப் போக்கினை எச்சரிக்கவும் இராமகாதையைப் படைத்தார். அரசியல் நெருக்கடியால் மனநிம்மதியற்றுப் போராட்ட அலைக்கழிப்புகளில் இருந்து விடுபட விரும்பிய மில்டன் இரண்டாம் சார்லஸ் மன்னனின் கொடூர ஆட்சியைக் கண்டு வெம்பினார். கண் பார்வையும் இழந்தார். நீண்ட நாட்களாக மனதில் புதைந்து கிடந்த கவி உணர்வும், சமயப் பற்றும், அரசியல் நெருக்கடிகளும், ஆங்கில மொழிப் பற்றும், பார்வை இழந்த நிலையிலும் சொர்க்க நீக்க காப்பியமாக மலர்ந்தது.

## இராமகாதை

அரக்கர்களின் தொல்லை தாங்காமல் தேவர்கள் திருமாலிடம் முறையிடத் திருமால் தசரதன் மதலையாக அவதரிக்கிறான். தசரதன் தனது மகனுக்கு முடிசூட்ட நினைக்கக் கைகேயி இதனைத் தடுத்துவிட, கைகேயி பெற்ற வரத்தால் இராமன் காடேக இராமனுடன் சீதையும், இலக்குவனும் காடு செல்லத் தன் தங்கை சூர்ப்பனகையின் சொல்கேட்டு இராவணன் சீதையைக் கவர மனைவியை இழந்த இராமன் சுக்ரீவன், அனுமன் துணையுடன் இராவணனை வென்று சீதையை மீட்டு அயோத்தி அரசவை ஏறினான். இது இராமகாதையின் கதை அமைப்பாகும்.

இந்நூல் ஆறு காண்டமும், 114 படலமும், 10386 பாடல்களையும் கொண்டது.

## சொர்க்க நீக்கம்

சொர்க்க நீக்கம் என்ற காப்பியம் பன்னிரு பகுதிகளைக் கொண்டது. இறைவன் தனது திருக்குமரனுக்கு முடிசூட்டித் தன் மகனின் ஆட்சிக்கு உட்பட்டு வாழ வேண்டுமென்று தேவர்களிடம் கூறினார். இதனைப் பலரும் ஏற்றனர். சாத்தானும் அவனது குழுவினர்களும் இதற்கு உடன்படாமல் எதிர்த்தனர். முடிவில் இறைவனை எதிர்த்துப் போரிட முயன்றனர். திருக்குமாரன் தலைமையில் போர் நடந்தது. சாத்தான் கூட்டத்தினர் தோல்வியுற்றுப் பாழ் நரகத்தில் வீழ்ந்தனர். உணர்வு பெற்ற சாத்தான் கூட்டத்தினர் ஒன்றுகூடி இறைவனையும், அவனது திருக்குமரனையும் எதிர்க்கத் திட்டமிட்டனர்.

நேரிடையாகப் போர்த்தொடுப்பதா? மறைமுகமாகச் சூது போர் செய்வதா? என்று விவாதித்தனர். இதற்கிடையில் இறைவனால் ஈடான் தோட்டத்தில் படைக்கப்பட்ட ஆதாம் ஏவாளைப் பழிவாங்குவது எனத் தீர்மானித்து இச்செயலுக்குச் சாத்தானே பரிந்துரைக்கப்பட்டான். சாத்தான் ஆதாம் ஏவாள் உள்ள இடத்திற்குச் சென்று அவர்களுக்குத் துர்போதனைகளையும் செய்கிறான். இரபேல் என்ற இறைத்தூதர் சாத்தானின் சூழ்ச்சியை ஆதாம் ஏவாளுக்கு எச்சரிக்கிறார்.

ஈடான் தோட்டத்தில் சுதந்திரமாக வாழ அனுமதித்த இறைவன் ஒரு மரத்தில் உள்ள விலக்குக் கனியை மட்டும் உண்ணக்கூடாது என ஆதாம் ஏவாளுக்கு எச்சரிக்கை செய்திருந்தார். சாத்தான் இவர்கள் அக்கனியை உண்ணும் துர்போதனைகளைச் செய்கிறான். ஒருநாள் ஏவாள் தனியே இருக்கும்பொழுது விலக்குக் கனியை உண்ணும்படியும் உண்டால் பல நல்ல பலன்கள் கிடைக்கும் என்றும் ஏவாளிடம் கூற அக்கனியை அவள் பறித்துஉண்ண அதனைக் கண்ட ஆதாமும் உண்ண, அவர்களது வாழ்வும் துன்பம் நிறைந்த வாழ்வாயிற்று. செய்த தவறினை மன்னித்து காத்தருளுமாறு இறைவனை வேண்டினார்கள். இறைவன் சாத்தானைப் பாம்பாக்கிப் பாலைவனத்தில் ஓடவிட்டு ஆதாம் ஏவாளை நோக்கி உங்களை இரட்சிக்கத் திருக்குமரன் பிறப்பான் என்கிறார். இது சொர்க்க நீக்கத்தின் கதை.

***காவியப் பாவலர்கள்***

கம்பனால் தமிழ் மொழியும், நாடும் பெருமை பெற்றது போல், மில்டனால் ஆங்கிய மொழியும், இங்கிலாந்தும் பெருமை பெற்றது. விருத்தம் என்னும் வெண்பாவிற்கு ஓர் உயர்கம்பன் என்று பாராட்டப்படுவதுபோல் ஆங்கில மொழியின் எதுகையில் லாபா இனத்திற்குப் பெருமை சேர்த்தவராக மில்டன் திகழ்கிறார். கம்பர் ஒரு வைணவர். சமரச சமய நோக்கு உடையவர். மில்டன் கிறித்துவ கத்தோலிக்க சமயத்துக்கு எதிரான இயக்கத்தைச் சார்ந்தவர்.

இருவரும் காவிய மூலத்தை வேறொரு நூலிலிருந்து பெற்றுள்ளனர். கம்பர் வால்மீகியின் இராமாயணத்தைக் காவிய மூலமாகக் கொண்டு தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏறப் அமைத்தார். பைபிளில் கூறப்படும் மனிதகுல வீழ்ச்சியை மூலமாகக் கொண்டு தனது காலச் சூழலுக்கேற்ப மில்டன் சொர்க்க நீக்கத்தைப் படைத்துள்ளார்.

இவ்விரு நூல்களில் அரங்கேற்றத்தின் பொழுது இருவரும் தடைகள் பலவற்றைச் சந்தித்தனர். கம்பர் தனது காவியத்தைச் சிதம்பரத்தில் அரங்கேற்ற இயலாமல் போக திருவரங்கத்தில் அரங்கேற்ற

வந்தபோது தடைஏற்பட, சடகோபரந்தாதி பாடிப் பின்பு அரங்கேற்றினார். மில்டன் தனது காவியத்தை வெளியிட ஆர்ச் பிஷப்பின் ஒப்புதல் பெற இயலாது போகப் பின்பு ஒப்புதல் பெற்று வெளியிட்டார்.

### காவியக் கட்டுக்கோப்பு

கம்பனும், மில்டனும் அருளிய காவியம் சிறப்பாக அமைதற்குக் காவிய கட்டுக்கோப்பும் ஒரு காரணமாகும். டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் கூறுவது போல கம்பன் காவியத்தின் தலைமை நிகழ்ச்சி சூர்ப்பனகை சூழ்ச்சியால் எழுச்சியுற்றது. சீதா கதாபாத்திரத்தில் திரிபு மையத்தை ஏவி அரக்கர் அழிவில் நிறைவு எய்தும் இராவணவதத்தைப் பொருளாக உடையது. மில்டன் காவியத்தின் நிகழ்ச்சி நரகத்தில் சாத்தானே செய்யும் சதியில் தொடங்கி மண்ணகத்தில் மானுடன் வீழ்ச்சியுறும் திரிவு மையத்தை எய்தி விண்ணகம் வழங்கும் தண்டனையில் நிறைவுறுகிறது.

### காவிய அமைப்பு

காவியம் மூவகைத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

1. ஒரு நிகழ்ச்சியைப் பொருளாகக் கொள்ள வேண்டும்.
2. அந்நிகழ்ச்சியை முழுமையாக எடுத்துரைக்க வேண்டும்.
3. அந்நிகழ்ச்சி சிறப்பானதாக இருத்தல் வேண்டும்.

இவ்விலக்கணங்களின் அடிப்படையில் இராமகாதையும், சொர்க்க நீக்கமும் அமைந்துள்ளன. இராவணன் வதம் இராம காதையின் மையப் பொருளாகும். சொர்க்க நீக்கத்தில் மனிதகுல வீழ்ச்சியே மையப் பகுதியாகும்.

இராமன் பிறப்பு, வளர்ப்பு, தாடகை வதம், வேள்வி காத்தல், சீதை திருமணம், இராமனுக்கு முடிசூட்ட நினைத்தல், கைகேயியின் வரம், இராமன் காடேகுதல், சூர்ப்பனகையின் காமம், இராவணன் சீதையைக் கவர்தல், இராமன் சுக்ரீவன் துணையுடன் சீதையை மீட்டல், இராவணன் வதம், இராமன் முடிசூடல் என்ற பகுதிகள் இராமகாதையின் கதைப் போக்கை நிர்ணயிக்கின்றன.

திருக்குமரனின் ஆட்சிக்கு உட்படாத நிலையில் போரிட்ட சாத்தான் கூட்டத்தினர் மயக்கமடைதல், சபைக்கூடல், திருக்குமரனை எதிர்க்க நினைத்தல், சாத்தானின் சூழ்ச்சிக்கு ஆதாம் ஏவாள் ஏமாறுதல், மனிதகுல வீழ்ச்சி தொடங்கல், திருக்குமரனால் சாத்தான் சபிக்கப்படுதல் என்ற பகுதிகள் சொர்க்க நீக்கத்தின் கதைப்போக்கை நிர்ணயிக்கின்றன.

### திருப்பு மையங்கள்

இரு காவியங்களின் திருப்பு மையங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. கம்பன் காவியம் இரு திருப்பு மையங்களைக் கொண்டுள்ளது.

1. சூர்ப்பனகை வருதல், இராமனுடன் உரையாடல, சீதையைக் கவர நினைத்தல்.
2. சூர்ப்பனகை சீதையைப் பற்றி இராவணனிடம் கூறல், இராவணன் சீதையை மாயமாகக் கவர்ந் செல்லல்

இராமகாதையின் உச்சநிலை சீதையைக் கவர்ந்ததே ஆகும்.

சொர்க்க நீக்கத்திலும், ஏவாளின் வீழ்ச்சியும், ஆதாமின் வீழ்ச்சியும் திருப்பு மையங்களாக உள்ளன.

சீதை ஏவாளைப் போல ஏமாளியாக விளங்குகிறாள். சன்னியாசி வேடத்தில் வந்த இராவணனைத் துறவி என்று நம்புகிறாள். பின்பு மாயவேடத்தை அறிகிறாள். ஏவாள் விலக்கு மரக்கனி பற்றிச் சாத்தான் கூறுவதை நம்புகிறாள். கடவுள் கட்டளையை மீறக் கனியை உண்கிறாள். குற்றவாளி ஆகிவிடுகிறாள்.

### இராவணன், சாத்தான்

இராவணன், சாத்தான் இருவரும் ஒத்த பண்புடையவர்களாக உள்ளனர். சாத்தானும், இராவணனும் தான் மேற்கொண்ட செயலில் எத்தனை இடர்பாடுகள் வந்தாலும் பின்வாங்காத உரநெஞ்சுடையவர்களாக உள்ளனர்.

முதல்நாள் போரில் இராவணனும், அனுமனும் சண்டையிடும்பொழுது அனுமன் இராவணனை ஓங்கிக் குத்துகிறான். அப்பொழுதுதான் இராவணன் முதன்முதலில் துன்பம் என்பது என்னவென்று உணர்ந்தான் என்பதைக் கம்பர் கூறுகிறார். மைக்கேலுடன் சாத்தான் போரிடும்பொழுது மைக்கேலின் வாள் சாத்தானின் உடம்பில் படுகிறது. அப்பொழுதுதான் முதன்முதலில் துன்பம் என்பது என்னவென்று சாத்தான் உணர்ந்தான் என்று மில்டன் கூறுகிறார்.

காம நிலையிலும், ஆணவ நிலையிலும் இருந்த இராவணன் சிறப்பான நிலையினை அடைந்து மண்டோதரியின் கணவனானான்.

சாத்தான் இறுதியில் மண்ணில் ஊர்ந்து சாம்பலைத் தின்னும் பாம்பாகச் சிறுமை அடைகிறான்.

### *சிக்கல் வீழ்ச்சி*

சொர்க்க நீக்கத்தில் ஏவாளின் வீழ்ச்சியால் மனிதகுலத்தின் வீழ்ச்சி தொடங்குகிறது. ஆதாமும், ஏவாளும் துன்பமுற்ற நிலையில் ஈடான் தோட்டத்திலிருந்து வெளியேறுகிறார்கள். ஆனால் கைகேயி பெற்ற வரத்தால் இராமன் காடு சென்றான். இராவணனை வதைக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

### *மந்திர ஆலோசனை*

கதை நிகழ்ச்சிகளை அமைக்கும்போது கவிஞர்கள் சமுதாய விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள் என்பதற்குச் சொர்க்க நீக்கத்தின் மந்திர ஆலோசனைப் பகுதியையும், இராமகாதையில் இராவணனின் மந்திர ஆலோசனைப் பகுதியையும் ஒப்பிடலாம்.

பரமண்டலப் போராட்டத்தில் தெய்வகுமாரனிடம் தோல்வியுற்று நரகத்தில் வீழ்ந்திருந்த சாத்தான் குழுவினர் மம்மோன் என்பவன் அமைத்த மண்டபத்தில் கூடினர். இக்கூட்டத்தில் இழந்த சொர்க்கத்தை மீட்கப் பகிரங்கமாகப் போர்புரிவதா? மறைமுகமாக சூது செய்வதா? என்பது விவாதிக்கப்பட்டது. அப்போது மேலோக் பேலியால், மம்மோன் பெயல் செயபு போன்றோர் அனைவரும் அவரவர் தம் எண்ணங்களை உத்வேகத்துடனும், சூழ்ச்சித் திறனுடனும் கூறினர்.

அனுமனால் இலங்கை எரியூட்டபின் மயனால் அமைக்கப்பட்ட புது மண்டபத்தில் இராவணனும், அவனது குழுவினரும் அனுமன் எரியூட்டியதனை விவாதித்தனர். இக்கட்டத்தில் வஜ்ஜிரதத்தன், துன்முகன், கும்பகர்ணன், விபீடணன் ஆகியோர் பேசினர். இவர்கள் அன்னவரும் மில்டனின் மாந்தர்களைப் போல் அல்லாமல், ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்டவர்கள் போல் பேசினர். கும்பகர்ணனும், விபூடணனும் எதிர்த்துப் பேசினர்.

இருவரும் இக்கட்சிகளை இருவேறு கோணங்களில் அமைத்துள்ளனர். மன்னனின் வாக்கு இறைவாக்கு என்றும், அதனை எதிர்ப்பது அரச குற்றமாகும் என்று நினைப்பது போல் கம்பர் இக்காட்சியை அமைக்கிறார். சுதந்திரமாக விவாதிக்கும் நிலையில் ஜனநாயக முறைப்படி மில்டன் அமைக்கிறார்.

**கதைநாயகன்**

கம்ப காவியத்தின் நாயகன் இராமன் என்பது உலகறிந்த உண்மை. திருவாலும், உருவாலும் செயல்முறையிலும் சிறந்து விளங்கும் ஒப்பற்ற பாத்திரமாக இராமன் விளங்குகின்றார். இராமன் என்ற காந்தத்தால் கவரப்பட்ட பாத்திரங்களாக ஏனைய பாத்திரங்கள் விளங்குகின்றன. எதிரியை இன்று போய் நாளை வா என்று கூறும் நிலையிலும் மன்னவன் பணியென்றாலாகி நும்பணி மறுப்பனோ என்று முடிசூடும் நிலையில் ஆணையிட்ட தாயிடம் கூறும் பண்பும் எதிரிகளிடம் அவர்நாண நன்னயம் செய்யும் இலக்கிய நாயகனாகத் திகழ்கிறார். எனவேதான் கம்பன் தனது காவியத்திற்கு இராமகாதை என்று பெயரிடுகிறார்.

கம்பனைப் போன்ற ஒரு காவிய நாயகனை மில்டன் படைக்கவில்லை. சொர்க்க நீக்கத்தின் காவிய நாயகன் யார்? என்ற கேள்விக்குச் சரியான முடிவு பெற முடியவில்லை. சிலர் சாத்தான்தான் காவிய நாயகன் என்பர். சிலர் தேவகுமாரனே காவிய நாயகன் என்பர். இக்கருத்துகளை ஆதரித்தும் எதிர்த்தும் பல கருத்துகள் தரப்பட்டுள்ளன.

இருபெரு கவிஞர்களும் அறம் வெல்லும் ஆணவம் அழியும் என்ற நிலையில் காவியத்தை அமைத்துள்ளனர். கவித்தத்துவத்தில் தலைசிறந்தவர்களாக விளங்குகின்றனர். காப்பிய அமைப்பு, நிகழ்ச்சிக்கோவை, பாத்திரப்படைப்பு, கற்பனை நயம், உணர்ச்சிப் பாங்கு போன்ற நிலைகளில் அந்தந்த மொழிகளில் அவர்களுக்கு நிகராக ஒருவருமில்லை என்று கூறுமளவிற்குக் காவியங்களைப் படைத்துள்ளனர். இவர்களின் காலமும், வாழ்க்கைச் சூழலும் நாகரீகப் பண்பாட்டு நிலைகளில் மாறுபாடுகள் இருந்தாலும் மனித வாழ்வை மேம்படுத்தும் நெறிகளைப் புகட்டியதில் தலைசிறந்து விளங்குகின்றன. காலவேறுபாடும், சமுதாய அமைப்பு வேறுபாடும் காவியங்களில் வேறுபாடுகளைக் காண காரணமாகின்றன. சோழப் பேரரசின் பொற்காலத்தில் கம்பர் இருந்தமையால் மானுடத்தின் வெற்றியை அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டு காவியம் புனைகிறார். அரசியல் தோல்வியும், கண்பார்வை இழப்பும் கொண்ட மில்டன் மானுடத்தை முழுவதும் வெறுத்துவிடவில்லை என்றாலும் மானுடம் அழிவுப் பாதையை நோக்கியே செல்கிறது ; அதனை மீட்க ஒருவர் தேவை என்று குறிப்பிடுவதனை அறியலாம். இருவரும் சமயத் தொடர்பான கதைகளை எடுத்துக் கொண்டாலும் மில்டனைவிடக் கம்பர் சமயப்பொறை உடையவனாகக் காட்சியளிக்கிறார்.

# ஒலியும் மொழியும்

முனைவர் வீ. ரேணுகாதேவி
இணைப்பேராசிரியை, மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

மனிதன் தன் உள்ளத்து உணர்வுகளையும், அனுபவங்களையும் தான் கற்றவற்றையும் மற்றொரு மனிதனுடன் பகிர்ந்து கொள்ள உதவும் ஒரு கருவியே மொழியாகும். மொழி என்ற ஒன்று இல்லையெனில் மனிதன் சிந்தனையால், எண்ணத்தால், பண்பாட்டுச் சிறப்பால் வளர்ச்சியடைய வழியே இல்லாது போய்விடும். எனவே மனித வரலாற்றில் மொழி ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது.

இத்தகைய மொழிக்கு அடிப்படையாக அமைவது ஒலி. ஒலியின்றேல் பேச்சில்லை; மொழியில்லை. ஒலியைத் தாங்கி நிற்கும் வடிவம் எழுத்தாகும். மொழிக்கு எழுத்து சிறப்பாக அமையலாம். ஆனால் இன்றியமையாத ஒன்று என்று கூற இயலாது. சில பேச்சு மொழிகள் அயல்மொழி எழுத்துக்களைக் கடனாகப் பெற்று வளர்ந்து வருவதைக் காணலாம். ஆஸ்ட்ரிக் மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த சந்தாலிமொழி வங்கமொழி எழுத்தினாலும், கொடகு மற்றும் துளு மொழிகள் கன்னடமொழி எழுத்தினாலும் எழுதப்பட்டு வருகின்றன.

ஆறறிவு கொண்ட மனித சமுதாயத்தையும் ஐந்தறிவு கொண்ட விலங்குகளையும் வேறுபடுத்துவது மொழி. மனிதனின் வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்திருப்பது மொழி. மொழி ஒரு சமூகச் செயலாக விளங்குகின்றது. நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற கருவூலத்தைத் துய்ப்பதற்கும், நாம் இன்று பெற்றுள்ள அறிவுச் செல்வத்தை நம் வழித் தோன்றல்களுக்கு வழங்குவதற்கும் மொழி பெருந்துணையாக அமைந்துள்ளது. மொழி மனிதனால் படைக்கப்பட்டது. மொழி பேச்சாகத் தோன்றியது; ஒலி வடிவ அமைப்பு நிலைத் தன்மை கருதி பிற்காலத்தில் வரிவடிவம் பெற்றது. சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ளது போன்ற இடுகுறி உறவுதான் ஒலிக்கும் எழுத்துக்கும் ஆகும். மனிதனின் இயற்கையான தேவைதான் அவனை மொழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது. இத்தூண்டுதலின் வெளிப்பாடு மொழி என்கிறார் ஹெக்டர். மொழியின் தொடக்கம் மனித உணர்ச்சிகளின் அடிப்படையிலேயே அமைந்தது. தான் உணர்ந்ததை வெளிக்காட்ட மனிதனால் ஒலிக்கப்பட்ட ஒலிகளின் தொடர்ச்சியே மொழியின் தொடக்கம்.

இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டது உணர்ச்சி மொழிக்கோட்பாடு (The Pooh-Pooh Theory). மொழி உணர்ச்சிகளின் வெளிப்பாடு என்றும், உடல் வலியின் போதும், மகிழ்ச்சியின் போதும் மனிதனால் ஒலிக்கப்பட்ட ஒலிகள் வியப்பிடைச் சொற்களாக இருந்தன என்றும் இக்கோட்பாடு விளக்குகிறது. இக்கோட்பாடு இத்தகைய வியப்பிடைச் சொற்களை ஆராய்கின்றதே தவிர இவ்வொலிகள் ஒலிக்கப்பட்ட முறைமையினை விளக்கவில்லை. மேலும் உணர்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த இவ்வொலிகளுக்கும் பின்னர் ஒலிப்பு முறைகளோடு மனிதனால் ஒலிக்கப்பட்ட ஒலித் தொடர்ச்சிகளுக்கும் இடையே உண்டான வளர்ச்சியையும் இக்கோட்பாடு விளக்கவில்லை. எனவே இக்கோட்பாட்டின் அடிப்படையில் மொழியின் தோற்றத்தை ஆராய இயலவில்லை.

பழங்காலத்தில் மொழி இயற்கையான ஒலிகளின் அடிப்படையிலேயே வளர்ந்திருக்க வேண்டும் என்கிறது பாவனை மொழிக் கோட்பாடு (The Bow-Vow Theory). மனிதன் காட்டிலோ நாட்டிலோ தான் சந்தித்த உயிர்கள் இயற்கையாகவே ஒலித்த ஒலிகளைத் தானும் பாவனை செய்து தன் கருத்தை வெளிப்படுத்தினான். காட்டில் மிருகங்களை வேட்டையாடித் திரிந்த நாகரிகமற்ற மனிதன் விலங்குகளின் ஒலியையும், பறவைகளின் ஒலியையும் பாவனை செய்து தான் இன்னின்ன விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி வந்த திறனைப் பிறருக்கு விளக்கினான். இவ்வொலிக் குறிப்புகளே பிற்காலத்தில் அவ்வப்பொருட்களைக் குறிப்பிடும் பெயர்ச் சொற்களாக மாறி மொழியின் வளர்ச்சிக்கு ஆதாரமாயின என்பர். இக்கோட்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் இன்றைய மொழியில் இவ்வியற்கை ஒலிகள் செவ்வனே அமைந்து காணப்படும் சொற்கள் ஏராளமாக உள்ளன. கா.....கா என்று கரையும் பறவையை காக்கா என்றும் குக்கூ என்று கூவும் பறவையை குயில் என்றும் அழைப்பதைக் குறிப்பிடலாம்.

மொழி உணர்ச்சிகளின் வெளிப்பாடு என்ற கொள்கை மாறி உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட சில கருத்துக்களையும் வெளிப்படுத்தும் வகையில் இவ்வியற்கை ஒலிகள் மனிதனுடைய மொழியில் முக்கிய இடம் பெற்றது எனலாம். ஆனால் உணர்ச்சி மொழிக் கோட்பாட்டைப் போல் இக்கோட்பாடும் இயற்கையான ஒலிகளைத் தவிர இன்றைய மொழியில் வழங்குகின்ற ஏனைய ஒலிகளை ஒலிக்க வேண்டிய ஒலி அமைப்பு (Articulctory structure) எவ்வாறு கைவரப்பெற்றது என்று விளக்கவில்லை. மேலும்

இக்கோட்பாட்டின் வாயிலாக மொழியில் காணப்படுகின்ற சில சொற்களின் தோற்றத்தை விளக்க முடியுமே தவிர மொழியின் தோற்றமே இவ்வொலிகளை அடிப்படையாகக் கொண்டதுதான் என்று வாதிடமுடியாது. ஒரு மொழியின் சொல் வளர்ச்சியில் இவ்வியற்கை ஒலிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது என்று மட்டுமே கூறமுடியும்.

நாகரிகமடைந்த மனிதன் ஒற்றுமையாகச் சில வேலைகளைச் செய்ய ஆரம்பித்த காலத்தில் தன்னையும் அறியாமல் சில ஒலிகளை உச்சரித்தான். இன்னும் கடற்கரையில் மீன் பிடிப்பவர் ஏலேலோ என்று பாடி வலையை இழுக்கும் காட்சியை நாம் காணலாம். இப்பொருளற்ற ஒலிகளின் வெளிப்பாட்டிற்கு உடலியல் முறைப்படி ஒரு காரணத்தைக் கூறலாம்.

கடினமான வேலைகளைச் செய்யம்போது குரல்வளை மூடுவதால் அதிகமான காற்று நுரையீரலில் அடைக்கப்பட்டு விடுகிறது. குரல்வளை திறக்கப்பட்டு நுரையீரலிலுள்ள காற்று வாய் உறுப்புக்கள் வழியாகத் தடைபட்டும் தடைபடாதும் வரும்போது உயிரொலிகளையும், மெய்யொலிகளையும் முறையே நாம் உச்சரிக்கிறோம். இவ்வொலிகள் பின்னர் மொழி வளர்வதற்கு அடிப்படையாயின என்று பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த நோயர் என்ற அறிஞர் கருதுகிறார். இம்மொழிக்ம் கோட்பாடு ஏலேலோ மொழிக்கோட்பாடு (The Ye-He-Ho Theory) என்று வழுங்கப்படுகிறது. இக்கோட்பாடு மனித மொழியின் தோற்றம் மனித ஒற்றுமையின் தொடக்கமே என்று தெளிவுபடுத்துகிறது. மேலும் ஏனைய மொழிக் கோட்பாடுகளைப் போல அல்லாது மொழியும் சமுதாயமும் ஒன்றிற்கொன்று இணைந்து நிற்பவை என்றும் மனிதர்களின் கருத்தொருமித்த நிலையிலேயே மொழி தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்றும் இக்கோட்பாடு விளக்குகின்றது.

மனிதன் தன் எண்ணத்தைப் பிறருக்குத் தெரிவித்து உறவாடுவது போல் விலங்குகளும் தம்மிடையே தம் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்கின்றன என்று பொதுவாக நம்பப்படுகின்றது. ஆனால் பகுத்தறிவுடைய மனிதன் பேசுவதைப்போல் விலங்குகளால் ஒரு மொழியைப் பேச முடிவதில்லை. விலங்குகள் தம் எண்ணங்களை வெளிப்படுத்த பல்வேறு சைகைகள் புரிகின்றன. இச்சைகை மொழியே விலங்குமொழி. டால்பின் என்ற மீன் இனம் 32 வகையான ஒலிகளை எழுப்புகின்றது. இந்த 32 வகையான ஒலிகளும் டால்பின் மொழி எனப்படும். டால்பின் மீன்கள் ஒலி எழுப்ப 3 வினாடி நேரமே எடுத்துக் கொள்கின்றன. சிம்பன்சி எனப்படும் மனிதக் குரங்கு தன் எண்ணங்களைத் தெரிவிக்க 9 வகையான ஒலிகளை எழுப்புகின்றது.

முற்காலத்து மனிதனும் மொழி வளராத காலத்தில் சைகைகளின் வாயிலாகத் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவித்திருக்க வேண்டும். இதற்கு ஆதாரமாக இன்றும் நாம் பல கருத்துக்களைச் சைகைகள் வாயிலாகத் தெரிவிக்கிறோம். இச்சைகை மொழியிலிருந்தே மொழி தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்றும் சில மொழியியல் அறிஞர்கள் எண்ணுகின்றனர். இக்கோட்பாட்டை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், வாய்மொழியும் சைகைமொழியும் இணைந்து இன்றைய மொழி உருவானது என்பதையும், ஒரு கருத்தைத் தெரிவிக்காத எந்த சைகையும் மனித மொழியில் இன்றில்லை என்பதையும் யாராலும் மறுக்க முடியாது. எனவே, மொழியின் வளர்ச்சியில் சைகைகளும் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன எனலாம்.

கடினமான வேலைகளிலும் தனக்கு வேண்டிய கருவிகளைத் தயாரிப்பதிலும் எப்பொழுதும் ஈடுபட்டிருந்ததால் ஆதி மனிதனால் தன்னுடைய கைகளாலோ, கண்களாலோ சைகைகள் செய்து கருத்தைத் தெரிவிக்க முடியவில்லை. இந்நிலையில் வாய்மொழிச் சைகைகளை மனிதன் கையாண்டான். இதுவே, இக்கால மொழி வளர்ச்சிக்குத் தோற்றமாக அமைந்தது என்று ரிச்சர்ட் பேஜட் கூறுகிறார். பேச்சு உறுப்புகளின் அசைவுகளால் எண்ணங்களை இலகுவாக வெளிப்படுத்திய எளிமையும், சைகைகளையே எப்பொழுதும் உபயோகிக்க இயலாமையும் வாய்மொழி சைகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய நிலையை உருவாக்கியது எனலாம். சைகையின் பொருளை உணர்த்த ஒரு குறிப்பிட்ட ஒலியை வெளிப்படுத்தியதின் முதல்படி மொழியின் ஒலியமைப்பு முறைக்கு அடிப்படையாக அமைந்தது. எனவே, பேச்சு உறுப்புகளின் குறிப்பிட்ட சில அசைவுகள் உணர்த்திய வாய்மொழி மனிதனுடைய மொழி வரலாற்றில் இருந்திருக்க முடியும் என்பதை நாம் நம்பலாம்.

விலங்குகளின் மொழிக்கு இலக்கணம் இல்லை. எல்லா விலங்குகளின் மொழியும் ஓரசைச் சொற்களாகவே இருக்கின்றன என்பர். இவ்வோரசைச் சொற்களை ஒன்றாகச் சீராக அமைத்து எந்த விலங்குகளும் சொற்றொடர்களை உருவாக்குவதில்லை. எந்தக் கருத்தையும் ஓரசைச் சொற்களாகவே விலங்குகள் பிற விலங்குகளுக்குத் தெரிவித்து விடுகின்றன. சிறு குழந்தை அரற்றுகின்ற ஒலிகளும், விலங்குகளின் ஒலிகளும் ஒன்றே. இவ்வொலிகளுக்குப் பொருளில்லை. ஆனால் வயது செல்லச் செல்ல

குழந்தை அது வாழுகின்ற சமுதாயத்தில் மொழியைக் கற்றுக் கொள்கிறது. விலங்குகளின் மொழி ஒலியளவிலேயே நிறைவு பெற்றுவிடுகிறது. குழந்தைக்கும் விலங்குக்கும் தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்ற தூண்டுதலே மொழிக்குக் காரணமாகிறது. விலங்குகளின் எல்லாத் தேவைகளும் இவ்வொலிக் குறிப்புகளால் நிறைவு பெற்றுவிடுகிறது. ஆனால், குழந்தையோ இத்தூண்டுதலுக்கும், தேவைகளுக்கும் அப்பால் பல்வேறு கருத்துக்களைப் பிறரோடு உறவாடி மகிழ தன்னுடைய சமுதாயத்தின் மொழிக்கான ஒரு மாதிரியைத் தேடுகிறது. பின்னர் அதைத் துணையாகக் கொண்டு மொழியைக் கற்கிறது. மொழி என்பது மனிதயினம் தன் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கும் பொருட்டு உபயோகிக்கின்ற காரண காரியங்களின் உட்படாத ஒலியுருவங்களின் சீரான அமைப்பு என்ற மொழிக்கான விளக்கம் பல மொழியியல் அறிஞர்களால் ஒத்துக் கொள்ளப்பட்டது. இவ்விளக்கம் எழுத்துமொழி, சைகைமொழி, விலங்குமொழி ஆகியவற்றை விடுத்து மனிதனின் பேச்சை மட்டும் மொழி என்று விளக்கியது.

மொழியின் அமைப்பை ஒலியனியல், உருபனியல், தொடரியல் என்ற தலைப்புகளின் கீழ் ஆராய்வர். மக்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதன் வாயிலாகச் சமூகம் வளர்ச்சியடைந்து வருகிறது. கருத்துப்பரிமாற்றத்தைச் சைகைகள் வாயிலாகவும், குறியீடுகள் வாயிலாகவும் தெரிவிக்கலாம். ஆனால் இவற்றின் வாயிலாக நுண்ணியக் கருத்துக்களை உணர்த்த முடியாது. பேச்சொலிகள் வாயிலாகவே எந்தக் கருத்தையும் உணர்த்த முடியும். பேச்சொலிகளைக் கொண்டு ஆயிரக்கணக்கான சொற்களைப் படைக்க முடியும். எனவே கருத்துப் பரிமாற்றத்தில் மொழியும், மொழியில் ஒலியும் சிறப்பாகக் கருதப்படுகின்றன.

ஒலிகள் ஒன்றோ பலவோ இணைந்து ஒலியன்களாய் இயங்குகின்றன. ஒலியன்களின் இணைவால் உருபன்கள் அமைகின்றன. உருபன்களின் இணைவால் சொற்களும், சொற்களின் இணைவால் வாக்கியங்களும் உண்டாகின்றன. ஒலிகள் பொருளற்றவைகள். உருபன்கள், சொற்கள், சொற்றொடர்கள் முதலியன பொருள் கொண்டவை. ஒரு மொழியைப் பற்றிய இலக்கணம் மொழியின் ஒலிகளில் தொடங்கி சொற்றொடரில் முடிவு பெறுகிறது.

ஒலியை ஆராயும் முறையில் மூன்று முறைகள் உள்ளன. அவை 1. பௌதிக ஒலியியல் (Acoustic Phonetics), 2. கேட்பொலியியல் (Auditory Phonetics), 3. உச்சரிப்பு ஒலியியல் (Articulatory Phonetics) என்பனவாகும். பௌதிக ஒலியியல் என்பது பேச்சொலியின் பௌதிகத் தன்மையை அதாவது ஒலி அலைகளாக வருவதை அளந்து கணக்கிடுகின்றது. கேட்பொலியியல் மனிதன் கேட்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றது. உச்சரிப்பு ஒலியியல் ஒலியுறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஒலியின் பிறப்பை ஆராய்கின்றது. மரபுவழி இலக்கண ஆசிரியர்கள் இம்முறையிலேயே ஒலிகளின் பிறப்பை விளக்கியுள்ளனர்.

ஒலிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு பேச்சொலிகளை உயிர், மெய் என இரண்டாகப் பிரிப்பர். பேச்சொலிக்குரிய காற்று வாயறையில் தடுக்கப்பட்டால் மெய்யொலிகளும், தடுக்கப்படாவிட்டால் உயிரொலிகளும் பிறக்கும்.

உயிர் ஒலிகளின் பிறப்பை விளக்குவதற்கு மூன்று முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை 1. இயங்கு ஒலிப்பானாகச் செயல்படும் நாக்கின் பகுதி, 2. நாக்கு அண்ணத்தை நோக்கி எழுகிற உயரத்தின் அளவு, 3. இதழ் அமைப்பு.

அண்ணத்தை நோக்கி எழுகிற நாக்கின் பகுதியையொட்டி உயிரொலிகளை முன்னுயிர்கள், நடு உயிர்கள், பின் உயிர்கள் என வகைப்படுத்துவர். நாக்கு அண்ணத்தை நோக்கி உயர்கிற உயரத்தையொட்டி மேல், இடை, கீழ் என்ற மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இதழ்களின் அமைப்பை யொட்டி இதழ்குவி உயிர்கள், இதழ்குவியா உயிர்கள் எனப் பிரிப்பர்.

ஒலியுறுப்புக்கள் அதிர்ந்தோ, காற்றை அடைத்தோ, வெளிவரும் காற்றை உதிரச் செய்தோ பிறக்கும் ஒலிகள் மெய்யொலிகள் ஆகும். மெய்யொலிகளின் பிறப்பு முயற்சியையும், பிறப்பிடத்தையும், ஒலிப்பு முறையையும் கொண்டு அடைப்பொலிகள் அல்லது வெடிப்பொலிகள், உரசொலிகள், மூக்கொலிகள், மருங்கொலிகள், ஆடொலிகள், அரை உயிர்கள் என வகைப்படுத்தலாம். இவ்வொலிகளைக் குறிக்க உலக ஒலியியற்கழகக் (International Phonetic Association) குறியீடுகளைப் பயன்படுத்துகிறோம்.

இரு சொற்களின் பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் ஒலி வேறுபாடே ஆகும். அடு என்னும் சொல் சமை என்ற பொருளையும், ஆடு என்னும் சொல் நடனம் செய் என்ற பொருளையும் குறிக்கின்றது.

இங்கு பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாக அமைந்தது'அ' என்ற ஒலியே.

இவ்வாறு சொல் வேறுபாட்டிற்குக் காரணமாய் அமைந்த மிகக் குறைந்த ஒலி வேறுபாட்டையே ஒலியன் என்கிறோம். தமிழில் 'க' கரம் சூழலுக்கேற்ப ஒலி மாறுபடும்.

| | |
|---|---|
| கடல் | Katal |
| பக்கம் | Pakkam |
| பகல் | Pahal |
| தங்கம் | Tangam |

சொல் முதலிலும், சொல் இடையில் இரட்டித்து வரும்போதும் அதிர்வில்லா ஒலியாக 'K' என்று ஒலிக்கப்படுகின்றது. இரண்டு உயிர்களுக்கிடையில் வரும்போது ககரம் உரசொலியாக 'H' என ஒலிக்கப்படுகின்றது. மூக்கொலிக்குப் பின் 'G' என அதிர்வுடை ஒலியாக ஒலிக்கப்படுகின்றது. சொல் வேறுபாட்டிற்குக் காரணமாய் அமைந்த ககர ஒலியன் சூழலுக்கேற்ப மாறுபடும் மூன்று வடிவங்களைக் கொண்டுள்ளது. இவ்வேறுபாடுகளைக் குறிக்க வரிவடிவம் இல்லை. இவற்றை ககர ஒலியனின் மாற்றொலிகள் என்பர்.

மொழி அலகுகளின் பொருளுக்கும், மொழி அலகுகளின் ஒலியமைப்பு, ஒலிப்புமுறை என்பனவற்றிற்கும் இடையே தொடர்பு உண்டு. ஒலிகள் பொருள் கொண்டவையல்ல. எனினும் ஒரு மொழியில் காணப்படும் ஒரு ஒலி அம்மொழியலகைப் பிற அலகுகளிலிருந்து பிரித்துரைக்கவும், அம்மொழி அலகின் பொருளைப் பிற அலகுகளின் பொருளிலிருந்து வேறுபடுத்தவும் பயன்படுகின்றது.

சில சொற்களில் காணப்படும் சில ஒலிகள் அச்சொற்களின் பொருள் வெளிப்பாட்டில் முக்கியத்துவம் பெற்றது போல தோன்றுவதால், அவ்வொலிகளுக்கென உணர்வு காட்டும் குணம் உண்டெனக் கருதுவர். தமிழில் ழ என்ற ஒலி வழுகல் உணர்வைச் சுட்டுகிறது எனக் கணிக்கப்படும்.

மெழுகு, மொழுகு, வழுகு, நழுவு, கழுவு
தழுவு, விழு, புழு, இழு, ஒழுகு

மொழியலகுகளில் பொருளின் அங்கங்களை அழுத்திக் கூறுவதற்காகச் சில ஒலிகளை அழுத்தி உச்சரிக்கலாம். ஒலிகளை அழுத்தி உச்சரிப்பது அலகுகளின் பொருள் வேறுபாட்டைச் சுட்டப் பயன்படுகின்றது.

நான் மட்டும் வருவேன்
நான் மட்ட்ட்டும் வருவேன்

மொழியலகான தொடர்களில் காணப்படும் ஒலியமைப்பின் உச்சரிப்புக்குத் தகுந்தாற் போல தொடரின் இலக்கண நிலை கூட மாறுபடுகின்றது.

நீ வாறே – நீ கட்டாயம் வரவேண்டும் (கூற்று)
நீ வாறே – நீ வருகிறாயா? (கேள்வி)

ஒலிப்பு முறையில் ஒன்றாக அமைந்த சொற்கள் இரண்டு வேறுபட்ட பொருளை உணர்த்துவதையும் காணலாம்.

ஆடு என்னும் சொல் dance, sheep என்னும் இரு வேறு பொருள்களைக் குறிக்கின்றது. படி என்னும் சொல் ஒலிப்பு முறையில் ஒன்றாக அமைந்து 'to read', 'a measure', 'step', 'copy' என்னும் நான்கு பொருளை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

ஒலியடிப்படை இயற்கைச் சொற்கள் (Onomatopoeic words) பொருள் சுட்டும் தன்மையில் தெளிவானவை. அவைகளின் ஒலியமைப்பு, அவற்றின் பொருளை எதிரொலிப்பவை. ஒலியடிப்படை இயற்கைச்சொற்கள் உலக மொழிகள் எல்லாவற்றிலும் காணப்படுகின்றன. சில குறிப்பிட்ட இயற்கைச் சொற்களின் ஒலியமைப்பு கூட எல்லா மொழிகளிலும் ஒத்திருப்பதைக் காணலாம். பல மொழிகளில் காணப்படும் கோழி கூவும் விதத்தைக் குறிக்கும் சொற்களை ஒப்பிடும்போது அச்சொற்களில் 'க்' என்ற ஒலி தோன்றுவதைக் காணலாம். தமிழ்–கொக்கரக்கோ, ஆங்கிலம்–காக்எடூடுல்டூ, ஹிந்தி–கவ்வா, டெனிஷ்–கிக்கெலிகி, ஸ்விடிஸ் – குக்கெலிகு, ஜெர்மன்–கிக்கெரிகி.

மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிகம் உடையதாக உயர்த்த வரும் அரிய கலை மொழியே. நெடுங்காலத்திலிருந்தே அவனோடு பின்னிப் பிணைந்து வாழ்ந்து வளர்ந்து வரும் மொழி மனிதனின் வாழ்க்கையில் இல்லையேல் மனிதன் மனிதனாக வாழ முடியாது. மொழி இல்லாவிட்டால் மனித நாகரிகமே இல்லை. மொழி இல்லாத சமுதாயத்தையோ, சமுதாயம் இல்லாத மொழியையோ காண்பது அரிதாகும். மனிதனின் மூச்சுக்காற்றிலிருந்து பிறப்பது ஒலி, ஒலியிலிருந்து பிறப்பது மொழி.

# ஐங்குறுநூற்றில் சொற்றொடர் அமைப்பு

முனைவர் இரா. சுதமதி,
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி,
திருச்செந்தூர்.

## முன்னுரை

பழங்காலம் தொட்டு இன்று வரை உயிரோட்டத்துடன் விளங்குவது தமிழ்மொழியே. வேறு மொழியின் துணையின்றி தனித்தே இயங்கவல்ல – இயக்கவல்ல மொழி தமிழே ஆகும். இதன் இலக்கணச் செழுமையே இம்மொழியை உயர்தனிச் செம்மொழியின் நிலைக்கு உயர்த்தியது எனலாம். பழமை வாய்ந்த சங்க இலக்கியங்களில் விரவிக்கிடக்கும் சொல்லமைப்பும் தொடரமைப்பும் பொருளமைப்பும் தமிழின் செம்மொழித் தன்மைக்குச் சான்றுகள். அவ்வகையில் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய ஐங்குறுநூற்றின் தொடரமைப்பை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

## சொற்றொடர் அமைப்பு

சொற்கள் தொடர்ந்து அமையும் அமைப்பைச் சொற்றொடர் என்பர். காலப்போக்கில் சொற்கள் மாற்றமடைகையில் சொற்பொருளும் மாற்றத்துக்கு உட்படுவதைக் காணலாம். சொற்றொடரமைப்பே ஒரு மொழியின் தனிச் சிறப்பைக் காட்ட வல்லதாகும். தொடரமைப்பை ஆராயும் இலக்கணக் கோட்பாடுகள் மாற்றிலக்கணக் கோட்பாடுகள் எனப்படும்.

பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றில் தமிழின் சொற்றொடர் அமைப்பை ஆராய முற்படுவது தமிழின் சிறப்பை, அமைப்பை அறிய துணை நிற்கும் முயற்சியாகும். குறுகிய தொடரமைப்புகளோடு காணப்படும் குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்றவை தமிழின் தொடரியலை அறிய தகுந்த சான்றுகளாக விளங்குகின்றன. இவற்றுள் ஐங்குறுநூறு இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.0

## தொடரமைப்பு வகைகள்

டாக்டர். சு. சக்திவேல், டாக்டர். பொ. சுயம்பு ஆகியோர் முறையே தமிழ்மொழி வரலாறு, தமிழ்மொழி அமைப்பும் வரலாறும் ஆகிய நூல்களில் சொற்றொடர்களைப் பின்வருமாறு பகுக்கின்றனர்.

1. பெயர்த் தொடர்கள்
2. வினைத் தொடர்கள்
3. தனித் தொடர்கள்
4. கூட்டுத்தொடர்கள்
5. கலவைத் தொடர்கள்

இவ்வமைப்பு முறைகள் ஐங்குறுநூற்று அடிகளில் பயின்று வருவதைக் காணலாம்.

**1. பெயர்த் தொடர்கள்**

"பெயர்த் தொடர்கள் ஒரு பெயர்ச் சொல்லைத் தலைமைச் சொல்லாகக் கொண்டு அமைகின்றன. பெயரடைகளும் பெயரெச்சங்களும் பெயர்ச் சொற்களுக்கு விளக்கச் சொற்களாகின்றன" என்று பெயர்த் தொடர்களுக்கு விளக்கம் தருகிறார் பெ. சுயம்பு. இத்தகைய பெயர்த்தொடர்கள் ஐங்குறுநூற்றில் ஏராளமாய்க் காணக் கிடக்கின்றன.

புணரி திளைக்கும் துறைவன் (150)
கலிழ்ந்த கண்ணள் (259)
உள்ளுதொறும் கலிழும் நெஞ்சம் (445)

இவை பெயரெச்சத் தொடர்கள்.

மட நடை நாரை (160)
சிறு வெண் காக்கை (161)
பூந்தார் மார்ப (362)
பல் இருங் கூந்தல் (429)

இவை பெயரடைத் தொடர்கள்.

எழுவாயும் பயனிலையுமாகப் பெயர்த்தொடரே அமையின், அவ்வகைத் தொடர் சமநிலைத் தொடர் எனப்படும்.

சுரும்பு பசிகளையும் பெரும்புனல் ஊரன் (65)
புதல்வற் கவைஇயினன் தந்தை (409)
பூ அணி கொண்டன்றால் புறவே (412)

இவற்றோடு நீண்ட பெயர்த்தொடர்களும் ஐங்குறு நூற்றுப் பாடல்களில் நிறைந்து காணப்படுகின்றன.

அம் சில ஓதி அசைநடைப் பாண்மகள் (49)
அலங்கு இதழ் நெய்தல் கொற்கை முன்துறை (185)
வண்டு இமிர் சுடர் நுதற் குறுமகள் (254)

பெயர்த்தொடர்கள் ஐங்குறுநூற்றின் கற்பனை வளத்துக்கும் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும் சான்றாக அமைந்துள்ளமையை அறிய முடிகிறது.

## 2. வினைத்தொடர்கள்

வினைமுற்றைத் தலைமைச் சொல்லாகக் கொண்டவை வினைத்தொடர்கள். பெயர்த்தொடர்களைப் போலவே வினையெச்சங்களும் வினையடைகளும் வினைமுற்றுக்கு விளக்கச் சொற்களாக வருவதை ஐங்குறுநூற்றுத் தொடரமைப்புகளில் காண முடிகிறது.

உண்கண் சிவப்ப, அழுது நின்றோளே (69)
நெய்தல் மயக்கி வந்தன்று (101)
இன்புற இசைக்கும் (102)
விட்டுச் சென்றனர் (340)

இவை வினையெச்சத் தொடர்கள். வினையெச்சங்களும் வினையடைகளும் அடுக்கி வரும் தொடர்களும் காணப்படுகின்றன.

நல்ல சொல்லி மணந்து இனி
நீயேன் என்றது எவன்கொல்? (22)
பூக்கெழு குன்றம் நோக்கி நின்று
மணி புரை வயங்கு இழை நிலைபெறத்
தணிதற்கும் உரித்து, அவள் உற்ற நோயே (210)

நல்ல நுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மா மருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென் (492)

இவற்றோடு ஐங்குறுநூற்றுப் பாடல்களின் தொடரமைப்பில் பல துணைவினைகள் அமைந்திருப்பதையும் காணமுடிகிறது.

எய்தினன் **ஆகின்று** கொல்லோ? (24)
வளர்ந்**திசினாங்கு** (44)
ஒழிதல் **செல்லாது** ஒண்டொடி குணனே (321)
பூ அணி கொண்**டன்றால்** புறவே (412)
விரையா**தீமே** (364)
இருள் பொர **நின்ற** இரவினானே (362)

இத்துணைவினைகள் வினைச்சொல்லைச் சார்ந்து வினைத்தொடரின் பொருளுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

சங்க இலக்கியங்களில் வினைமுற்றுக்கள் எச்சமாகப் பயன்படுத்தப்படும் புதிய சொற்பயன்பாட்டினை பெ. சுயம்பு தம் 'தமிழ்மொழி அமைப்பும் வரலாறும்' நூலில் குறிப்பிடுகிறார். அவ்வாறே ஐங்குறு நூற்றிலும் எச்சங்கள் முற்றாக இடம்பெற்றுள்ள புதிய பயன்பாட்டினைக் காணமுடிகிறது.

பிரிந்தனன்அல்லனோ? பிரியலென் என்றே (18)
தீ உறு மெழுகின் நெகிழ்வனர் விரைந்தே (32)
வந்தனெம் மடந்தை! நின் ஏர் தர விரைந்தே (491)

இத்தகைய வினைத்தொடர் அமைப்புகள் தமிழ்மொழி பெற்ற வளர்ச்சி நிலைக்குச் சான்றுகளாகும்.

### 3. தனித்தொடர்கள்

தனித்தொடர்கள் பொருள் அடிப்படையில் அமைகின்றன. இவை செய்தித்தொடர், ஏவல்தொடர், வினாத்தொடர், வியங்கோள் தொடர், உணர்வுத் தொடர், செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத் தொடர் எனப் பல வகைப்படும்.

### 3.1. செய்தித் தொடர்

செய்தித் தொடர்களை உடன்பாட்டுத் தொடர், எதிர்மறைத் தொடர் என இரண்டாகப் பிரிக்கலாம்.

அரும்பொருள் செய்வினை தப்பற்கும் உரித்தே (302)
அன்னையும் அருந்துயர் உழந்தனள் (242)

'இவை உடன்பாட்டுத் தொடர்கள்'

உடலினென் அல்லேன் (66)
அறியேம் அல்லேம் (240)
மறந்து அமைகல்லாது என் மடம் கெழு நெஞ்சே (457)

இவை எதிர்மறைத் தொடர்கள். ஐங்குறுநூற்றில் எதிர்மறைத் தொடர்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. உடன்பாட்டு முற்றுக்களுடன் 'அல்' அடியாகப் பிறந்த முற்றுக்கள் இணைந்து எதிர்மறைத் தொடர்கள் காணப்படுகின்றன.

### 3.2. ஏவல்தொடர்

கட்டளை இடும் ஏவல் வினைமுற்றுக்களைக் கொண்டு இத்தொடர் அமையும். ஐங்குறுநூற்றில் இவ்வேவல் தொடர்கள் இயற்கை ஏவல், முன்னிலை ஏவல், எதிர்மறை ஏவல் என அமைகின்றன.

*அன்னாய்! வேண்டு அன்னை!* (101)

இது வினைப்பகுதியே ஏவலாக அமைந்த இயற்கை ஏவல் தொடர்.

உரைமதி நீயே (478)
அறிந்தனை ஒழுகுமதி (44)
கடவுமதி! (483)
ஊர்மதி வலவ! (486)

'அதி' என்ற அசைச்சொல்லை விகுதியாகப் பெற்ற இத்தகைய ஏவல் தொடர்கள் ஐங்குறுநூற்றில் பரந்து காணப்படுகின்றன.

கைவல் பாண! எம் மறவாதீமே (473)
செல்லாதீமோ என்றனள் யாயே (186)

இவை எதிர்மறை ஏவல் தொடர்கள். 'ஈம்' என்ற துணைவினைச் சொல்லைப் பெற்று வருகின்ற இத்தகைய தொடர்கள் பலவற்றை ஐங்குறுநூற்றில் காணமுடிகிறது.

### 3.3. வினாத் தொடர்

ஐங்குறுநூற்றுப் பாடல்கள் பல வினாப் பொருளில் அமைந்துள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் வினாப் பொருளைக் கொண்டு திகழ்கின்றன. யார், எவன் போன்ற வினாச் சொற்களையும் ஆ, ஓ, எ, கொல் ஆகிய வினா இடைச்சொற்களையும் இவை பெற்று வந்துள்ளன. இவ்வினாத் தொடர்களை வினா அடி, வினா இடைச்சொல் ஏற்ற தொடர்கள், வினாப் பதிலீட்டுத் தொடர்கள் எனப் பகுக்கலாம்.

யார்நலம் சிதையப் பொய்க்குமோ இனியே? (48)
எவ்வூர் நின்றன்று மகிழ்ந! நின் தேயே? (62)
என் பயம் செய்யுமோ? (244)

இவை வினா அடித் தொடர்கள்.

அறியுமோதில்ல? (241)
மகிழ்நன் மாண்குணம் வண்டு கொண்டன கொல்? (90)

இவை வினா இடைச்சொல் தொடர்கள்.

உண்கண் பசப்பது எவன்கொல்? (21)
யான் எவன் செய்கோ? (133)

இவை வினாப் பதிலீட்டுத் தொடர்கள்.

வினாத் தொடர்கள் கற்போரின் மனத்தில் உணர்வுகளை எழுப்ப வல்லன. அகப்பொருள் சார்ந்த இவ்வினாத் தொடர்கள்

அகமாந்தர்களின் அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தும் தன்மையனவாய் ஐங்குறுநூறு எங்கும் விரவிக் காணப்படுகின்றன.

## 3.4. வியங்கோள் தொடர்

ஐங்குறுநூற்றின் தொடரமைப்புகளில் சிறப்புற்று விளங்குவது வியங்கோள் தொடரே ஆகும். ஐங்குறுநூற்றுப் பாடல்கள் எங்கும் விரவிக் காணப்படும் இத்தொடர்கள் பாடல்களின் இனிமைக்கும் வளமைக்கும் துணை நிற்கின்றன. புலவர்களின் மனவளத்தையும் புலமைத்திறத்தையும் இவை எடுத்துக் கூறுகின்றன. இத்தொடர்கள் தமிழ்மொழியின் தனித் தன்மைக்கும் தமிழர் பண்பாட்டின் சிறப்புக்கும் சான்றாக அமைகின்றன.

ஐங்குறுநூற்றின் முதல் பத்துப் பாடல்களான வேட்கைப் பத்து முழுவதும் வியங்கோள் தொடர்கள் மலிந்து காணப்படுகின்றன.

நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க! (1)

பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!
பூக்கஞல் ஊரன் தன்மனை
வாழ்க்கை பொலிக! (3)

அறம் நனி சிறக்க! அல்லது கெடுக! (7)
கிள்ளை வாழிய, பலவே! (281)
அம்ம வாழி! தோழி!
அன்னாய் வாழி!

இவை யாவும் ஓரிரு சொற்களால் ஆன சிறிய தொடர்களாகும்.

## 3.5. உணர்வுத் தொடர்

வியப்பு, மகிழ்ச்சி, துயரம், அச்சம், வெறுப்பு, சினம், இரக்கம், துன்பம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது உணர்ச்சித் தொடர் ஆகும். பொதுவாக, அகப்பாடல்களைத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்பர். மேற்குறிப்பிட்ட உணர்வுகளை உள்ளடக்கிய தன்மையுடனேயே அகப்பாடல்கள் அமைந்திருக்கும். ஐங்குறுநூறும் அத்தகையதே. உணர்வுகளைப் பாடல்வரிகளில் சுமந்து நிற்கும் ஐங்குறுநூற்றில் அவ்வுணர்வுகளை வெளிப்படுத்தும் ஒலிக்குறிப்புச் சொற்கள் மிகுதியாகக் காணப்படவில்லை.

மன் பிணித்து அம்ம, பாணனது யாழே! (411)
—உவகை

இனிதால் அம்ம, இனியவர்ப் புணர்வே! (415)
—உவகை

வாராய் ஆயின், வாழேம், தெய்யோ! (239)
—துயரம்

பயந்தன மாதோ, நீ நயந்தோள் கண்ணே! (264)
—அச்சம்

புலவர்கள் அகமாந்தர்களின் உணர்வுகளை வெளிப்படுத்த பொருளமைப்பில் தம் சிந்தனையைச் செலுத்தியுள்ளார்களே அன்றி ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்த முயலவில்லை என்பதை இதனால் அறியலாம்.

### 3.6. *செய்வினைத் தொடர்*

*இது எழுவாய் செய்த வினையைப் பயனிலையாகக் கூறுவது.*

இனிப் பசந்தன்று,என் மாமைக் கவினே (35)
வதுவை அயர விரும்புதி நீயே (61)
தவநனி சிவந்தன, மகிழ்ந! நின் கண்ணே (80)

ஐங்குறுநூற்றுப் பாடல் வரிகள் செய்வினைத் தொடர்களைக் கொண்டவை.

### 3.7. *செயப்பாட்டு வினைத் தொடர்*

செயப்படு பொருளை எழுவாயாகவும் எழுவாயைக் கருத்தாகவும் கொண்டு வினையுடன் பெறு, படு முதலிய ஒட்டுக்களைச் சேர்த்து வருவது செயப்பாட்டு வினைத் தொடர் எனப்படும்.

நீ நயந்து உறையப்பட்டோள் யாவளோ? (370)

### 4. *கூட்டுத் தொடர்கள்*

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்த் தொடர்கள் அல்லது வினைத்தொடர்கள், பிற இலக்கணக் கூறுகள் கூட்டாக இணைந்து வருவன கூட்டுத் தொடர்கள் எனப்படும். ஒரு எழுவாய் பல பயனிலைகளைப் பெற்று வரும்.

குன்றக்குறவன் காதல் மட மகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு,
மலை உறை கடவுள் குலமுதல் வழுத்தி,
தேம் பலிச்செய்த ஈர் நறுங் கையள் (259)

அவிர்தொடி கொட்ப, கழுது புகவு அயர,
கருங்கட் காக்கையொடு கழுகு விசும்பு அகவ,
சிறு கண் யானை ஆள் வீழ்த்துத் திரிதரும்
நீள் இடை அருஞ் சுரம் (314)

இத்தகைய கூட்டுத் தொடர்கள் பாடல்களின் பொருள் ஆழத்திற்குத் துணை நிற்பனவாய் அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது.

### 5. கலவைத் தொடர்கள்

ஒரு முதன்மைத் தொடரினுள் ஒன்றோ பலவோ துணைத் தொடர்கள் அமைந்து வருவது கலவைத் தொடர் ஆகும். இத்தகைய கலவைத் தொடர்கள் ஐங்குறுநூற்றுப் பாடல்களில் ஏராளம். வேட்கைப்பத்து முழுவதும் இக்கலவைத் தொடர்கள் காணப்படுகின்றன.

"வாழி ஆதன், வாழி அவினி!
நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!
என வேட்டோளே, யாயே; யாமே,
நனைய காஞ்சிச் சினைய சிறு மீன்
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க என வேட்டேமே (1)

'இது என் பாவைக்கு இனிய நன் பாவை
இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி,
இது என் பூவைக்கு இனிய சொற் பூவை என்று,
அலமரு நோக்கின் நலம் வரு சுடர் முதல்
காண்தொறும் காண்தொறும் கலங்க,
நீங்கினளோ – என் பூங் கணோளே?' (375)

இத்தொடர்கள் பல செய்திகளைச் செறிவாக்கும் பொருள் எளிமைக்குத் துணை நிற்கின்றன.

ஐங்குறுநூற்றுப் பாடல்களில் மேற்குறிப்பிட்ட தொடர்கள் தவிர அடுக்குத் தொடர்கள் பலவும் காணப்படுகின்றன. இவ்வடுக்குத் தொடர்கள் அக மாந்தர்கள் தம் கூற்றினை வலியுறுத்தும் பொருட்டாக அமைக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது.

காண்தொறும் காண்தொறும் கலங்க (375)
வல்லன் வல்லன் பொய்த்தல் (37)
நல்லள் நல்லள் என்ப (204)
நொந்து நொந்து உயவும் உள்ளமொடு (491)

பல தொடர்கள் எதிர்மறைப்பொருள் கொண்டு ஐங்குறுநூற்றின் இலக்கிய நயத்துக்குச் சான்றாக அமைகின்றன.

நல்லன் என்னும் யாமே
அல்லன் என்னும் என் தடமென் தோளே (11)
நல்லள் நல்லள் என்ப
தீயேன்தில்ல (204)

'பிரிந்தனன் அல்லனோ, பிரியலென் என்றே (18)

இத்தொடரமைப்புக்கள் சங்ககால இலக்கிய, இலக்கண வளத்தை வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.

**முடிவுகள்**

1. சங்கப் பாடல்களுள் ஐங்குறுநூறு சில சொற்களைக் கொண்டு கருத்துக்களைச் செறிவாகக் கூறும் பாடல்களால் ஆன இலக்கியம்.

2. இதில் பெயர்த் தொடர்கள், வினைத்தொடர்கள், தனித்தொடர்கள், கூட்டுத் தொடர்கள், கலவைத் தொடர்கள் என்னும் தொடர்வகைகள் பரவலாக இடம் பெற்றுள்ளன.

3. இத்தொடரமைப்புகளுள் எதிர்மறைத் தொடர்கள், ஏவல் தொடர்கள், வியங்கோள் தொடர்கள், கூட்டுத் தொடர்கள், கலவைத் தொடர்கள் ஆகியன ஐங்குறுநூற்றில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

4. தொடரமைப்புகள் ஐங்குறுநூற்றின் கற்பனை வளம், உணர்ச்சி வெளிப்பாடு, மன வளம், புலமைத்திறம், பொருள் திறம் ஆகியவற்றை வெளிப்படுத்தத் துணை நிற்கின்றன.

5. இலக்கிய, இலக்கணச் செழுமை வாய்ந்த இத்தகைய தொடரமைப்புக்கள் தமிழின் செம்மொழித் தன்மைக்குச் சான்றுகள் எனலாம்.

# பொறாமை நீக்கு

## 24.11.2006 மதுரை வானொலியில் சான்றோர் சிந்தனையாகச் சொன்னவை

முனைவர் க. சின்னப்பா

இரண்டு பேருடைய வேண்டுதலை ஒரே நேரத்தில் நிறைவேற்ற கடவுள் தோன்றினார். தோன்றிய கடவுள் சொன்னார்–"இரண்டு பேருக்கும் வரம் தருவதற்காக வந்திருக்கிறேன், கேளுங்கள் கேட்டதைக் கொடுப்பேன். ஆனால் முதலில் யார் கேட்கிறீர்களோ அதைப்போன்று கேட்காதவருக்கு இரண்டு பங்கு கொடுப்பேன். சீக்கிரம் கேளுங்கள் நான் புறப்படவேண்டும்" என்றார். இரண்டுபேரும் நெடுநேரம் யோசித்தார்கள். கேட்கவில்லை. கடைசி நிலையில் ஒருவன் கேட்டான் எனக்கு வலது கண் போகவேண்டும் என்று!

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்.

ஒன்றின் பொருட்டு ஒன்று விளைகிறது. அவனிடம் இருப்பது என்னிடம் இல்லையே என்பது பொதுவானது பொறாமை. என்னிடம் இருப்பது அவனிடமும் இருக்கிறது என்பது இந்திய நாட்டுப் பொறாமை.

துரியோதனனுக்கு ஏற்பட்ட பொறாமையின் காரணமாகப் பாண்டவர்களின் உடைமை மீது ஆசைப்பட்டான். அவனது ஆசை நிறைவேறாத காரணத்தினால் கோபம் என்னும் வெகுளி உண்டாகிறது. கோபம் வந்த யாரும் கொடிய சொற்களைத் தான் பேசுவார்கள். அவனும் தரம் தாழ்ந்து தகாத வார்த்தைகளைப் பேசுகிறான். "சூதுப்போர் வேண்டாம், பாஞ்சாலியைச் சபையில் வைத்து அவமானப்படுத்த வேண்டாம்" என அறிவுரை சொன்ன சொந்த சிற்றப்பனை, அறம் அறிந்த விதுரனை

நன்றி கெட்ட விதுரா...

சிறிதும் நாணமற்றவிதுரா...

தின்றஉப்பினுக்கே நாசம் தேடுகின்றவிதுரா...

அன்று தொட்டு நீயும் எங்கள் அழிவு நாடுகின்றாய்...

மன்றில் உன்னை வைத்தால் எந்தை மதியே என்னுரைப்பேன்...

சிறிதும் நாணமற்ற விதுரா...
தின்ற உப்பினுக்கே நாசம் தேடுகின்ற விதுரா...
அன்று தொட்டு நீயும் எங்கள் அழிவு நாடுகின்றாய்...
மன்றில் உன்னை வைத்தான் எந்தை மதியே என்னுரைப்பேன்...
ஐவருக்கு நெஞ்சும் – எங்கள் அரண்மனைக்கு வயிறும்
தெய்வமன் றுனக்கே விதுரா செய்துவிட்டதேயோ
மெய்வகுப்பவன் போல் – பொதுவாய் விதி உணர்ந்தவன் போல்
ஐவர்பக்கம் நின்றே– எங்கள் அழிவு நாடுகின்றாய் ..............

என்று இன்னாச் சொல் பேசுகின்றான்.

அழுக்காறு தோன்றுமிடத்தில் ஆசை நிறைவேறாத போது கோபம் வந்துவிடும். அப்போது இப்படிப்பேசுவது பொறாமை கொண்டோர்க்கு இயல்பு.

அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, ஆள்வினை உடைமை, நாணுடைமை என ஒன்பது சொத்துக்களை வள்ளுவர் நமக்கு வழங்கியிருக்கிறார். பொறாமையோடு கூடிய இன்னும் பதினெட்டு ஆமைகள் உண்டு. ஆமை புகுந்த இடம் உருப்படாது. அந்த ஆமைகள் பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை, கள்ளாமை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை, நிலையாமை, கல்லாமை, சிற்றினம் சேராமை, பொச்சாவாமை, வெருவந்த செய்யாமை, இடுக்கன் அழியாமை, அவை அஞ்சாமை, புல்லறிவாண்மை, பெரியாரைப் பிழையாமை, கள்ளுண்ணாமை ஆகும்.

எனவே,

"அழுக்காறு என ஒரு பாவிதிருச் செற்று
தீயுழி உய்த்து விடும்".

எனவே பொறாமை நீக்கிப் பொறையுடைமையைக் கடைப்பிடிப்போம். அன்புடைமையும், அறிவுடைமையும், அருளுடைமையோடு அதுவாக வந்து சேரும். வாழ்க வையகம்.

பதிப்பாசிரியர்

**பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்**

## ஆசிரியர் குழு

முனைவர். திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர். திரு. சுப. அண்ணாமலை
முனைவர். திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர். திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் நா. பாலுசாமி
முனைவர் பெ. சுயம்பு
முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர். திரு. செ. கந்தசாமி
முனைவர். திரு. க. சின்னப்பா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

# மதுரைத் தமிழ்ச்சங்க
# நூற்றாண்டு மலருக்கு

**தமிழ், தமிழ்ப் பண்பாடு,**
**தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்**
மற்றும்
**வள்ளல் பாண்டித்துரைத் தேவர்**
குறித்த கட்டுரைகள் அனுப்ப

தொடர்பு முகவரி


பதிப்பாசிரியர்,
செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

முதல்வர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை–1.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai – 1.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,